www.padippakam.com

# சிந்தனை

பங்குனி
*
சித்திரை

1991




உள்ளே

* புரட்சிகரப்பாரம்பரியத்தின் மறுமலர்ச்சி. ந.ச.ச.க.செயலாளருடன் ஒரு பேட்டி

* கிழக்கு-மேற்கு ஜேர்மன் இணைவின் விளைவுகள்

* புதிய அரசியல் வியாபாரிகள்

* பிரெஞ்சுப் புரட்சி

* கலாசாரம் பற்றி..

* இரண்டாவது பிறப்பு – ஒரு பார்வை

படிப்பகம்

www.padippakam.com

# இலக்கியச்சந்திப்பு

டியூல்பேர்க் (ஜேர்மனி) நகரில் நடைபெற்ற 11வது இலக்கியச்சந்திப்பு பல விமர்சனங்களையும் விவாதங்களையும் உருவாக்கியுள்ளது. ஆனால் இவற்றை ஆழ்ந்து நோக்குமிடத்து இலக்கியச்சந்திப்பின் ஆரம்ப நோக்கம், அதன் இயற்கையான வளர்ச்சி பற்றிய தவறான கணிப்பீடுகளே இவற்றிற்கு அடிப்படையாக இருப்பதை உணர முடிகின்றது.


முதலில் டியூல்பேர்க் நகரில் நடைபெற்ற இலக்கியச் சந்திப்பில் காணப்பட்ட தொய்வு நிலைக்கான காரணம் ஒழுங்கு செய்தவர்களின் கவனக்குறைவுகளேயாகும். விண்ணப்பப் பத்திரங்கள் பரவலாக வாசகர்களுக்கு வினியோகிக்க கூடியமுறையில் சஞ்சிகைகளுக்கு உரியகாலத்தில் அனுப்பப்படவில்லை. இதனால் குறைந்த தொகையினரே பங்கு கொண்டதுடன், முன்னொருபோதும் இல்லாதவாறு பொருளாதாரரீதியான பாதிப்பையும் ஏற்படுத்தியது.

வாசகர் விமர்சன நிகழ்ச்சியில் அதிகமான பெண்கள் பங்கு கொண்டதானது ஆரோக்கியமான விடயமாகும். ஐரோப்பிய சஞ்சிகைகள் மீதான விமர்சனத்தில் சில ஆழமான கருத்துக்கள் சொல்லப்பட்டிருந்தும், சிலரின் திசைதிருப்பும் நடவடிக்கைகளினால் சஞ்சிகைகள் மீதான விவாதங்கள் வழமைபோலவே முழுமை பெறவில்லை. பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியும் பேற்றோர்களின் பங்கும் என்ற கட்டுரை விமர்சனங்களை உருவாக்கவில்லை!

இறுதியில் இடம் பெற்ற நாடகம் கடுமையான விமர்சனத்திற்குட்படுத்தப்பட்டது.

"இலக்கியச்சிந்திப்பு" பற்றி வாசிக்கப்பட்ட கட்டுரையும் கருத்துப்பரிமாறல்களும் மேலும் தொடரப்பட வேண்டியவை எனக் கருதுகின்றோம்.

(அடுத்த இதழில் நிறைவுபெறும்)




"பேய் அரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள்"

மனித உரிமை மீறல்களை, மனித உயிர்களின் அழிவுகளை அலட்சியம் செய்து , எத்தனை மனிதரை சிறைப் பிடித்தோம், எத்தனை மனிதரைக் கொன்றோம் என்ற கணக்குகளின் மூலமே தமது வெற்றிகளைக் கணக்குப் போடுபவர்கள்..... அந்த மக்களின் சவப்பெட்டிகள் மீது தமது வெற்றிகளைக் கொண்டாடுபவர்கள் ...... இப்படிப்பட்டவர்களின் ஆட்சியைத்தான பாரதி "பேய்களின் அரசு" என்றான் போலும்!

வளைகுடாப் போரின் போது தீ மூட்டப்பட்ட எண்ணெய் கிணறுகள் இன்னும் எரிகின்றனவாம். அவற்றின் நச்சுப்புகை இந்து சமுத்திரத்தையும் தாண்டி மேற்கு சீனாவிலுள்ள பயிர்களையே நாசப்படுத்துகின்றன எனச் செய்திகள் கூறுகின்றன. போரில் மாண்டவர்கள் மட்டுமல்ல இன்னும் இதனால் பாதிக்கப்படப் போகின்றவர்கள் மக்கள்தான். ஆனால் ஏகாதிபத்திய அரசுகள் வெற்றி கோஷங்கள் போட்ட வண்ணமே இருக்கின்றன.

நமது மண்ணில் தினமும் மடியும் மக்களை, இருதரப்பினரும், பல்வேறு பெயர் கொண்டு அழைத்து - 'எம்மவர் தரப்பில் எவ்வித இழப்புமில்லை' என்று புழுகி - "வெற்றி" அறிக்கைகள் விடுகின்றனர்.

ஆனால் இந்த மனிதத்துவத்தை இழந்த மாக்களை மக்கள் நிராகரிக்கும் ஒரு நாள் வந்தே தீரும்.

மனித நேயத்தை மரணித்த
மனித உருவங்களை
மனிதத்துவம்
ஒரு நாள் தோற்கடிக்கும்

(கவிதை: செழியன்)

www.padippakam.com

3/6/91

# சிந்தனை

## 2/91



ஆரம்பம் 1985
சுதந்திரமான கருத்துப் பரிமாறல்கள் மூலமே சிந்தனை உருவாகின்றது.

SINTHANAI
Haussmannstr. 107,
7000 Stuttgart 1,
GERMANY.


ஸ்ரீலங்கா ஜனாதிபதி மீண்டும் புலிகளுடன் சமாதானத்திற்கான பேச்சுவார்த்தைகளுக்குத் தாம் தயார் என மேடை அறிவித்தல்கள் விட்டவண்ணம் இருக்கின்றார். ஆனால் அரச படைகளின் படுகொலைகள் எவ்வித ஓய்வுமின்றித் தொடருகின்றன. முடிவில்லாத சர்வகட்சி மாநாடில் தமது தீர்வை வைப்பதற்குப் பதிலாக சதுரங்கக் காய்களை அரக்குவது போல "அவரையும் இவரையும்" பேசவிட்டுக் காலத்தைக் கடத்துகின்றார். இவற்றின் மத்தியில் நாட்டில் "ஜனநாயகம்" இருக்கின்றது என வெளியுலகிற்குக் காட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலும் அரங்கேற்றப்படுகின்றது.

இவையெல்லாம் சர்வதேச நாணய நிதியத்தின் பாரீஸ் உதவிக் குழு ஆனிமாதத்தில் கூடி அளக்கப் போகும் படியை ( கடனை !) அதிகமாக்குவதற்கான தந்திரோபாயங்கள்தான். இலங்கையில் அதிகரிக்கும் மனிதக் கொலைகள் போலவே அதற்குக் கிடைக்கும் கடனுதவிகளும் அதிகரிப்பது ஆச்சரியம்தான்! 1988ல் 550 மில்லியன் டாலர்களை இந்தக் குழுவிடம் கடனாகப்பெற்றுக் கொண்ட ஸ்ரீலங்கா அரசு 50,000க்குமதிகமான சிங்கள இளைஞர்களைக் கொன்ற பின் 1989ல் 785 மில்லியன் டாலர்களை கடனுதவியாகப் பெற்றது.

1990ல் பிரபாகரனினால் நேர்மையானவர், உத்தமமானவர் என ஸ்ரீலங்கா ஜனாதிபதி வர்ணிக்கப்பட்டும், புலி இயக்கத்தினர் 'ஸ்ரீலங்கா அரசு மனித உரிமைகளை மீறவில்லை' என சர்வதேச மன்றங்களில் நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கிய பின்பு என்றுமில்லாத வகையில் 1000 மில்லியன் டாலர்கள் உதவியாக வழங்கப்பட்டது. அந்தப் பணத்தில் வாங்கிய குண்டுகளும் துப்பாக்கிகளும் இன்று தமிழ் மக்களை அழிப்பதற்கு பயன்படுகின்றன!

தமக்கு அவசியமான வேளைகளில் யுத்தங்களை நடத்தவும் அல்லது சமாதானம்பேசவும் அதற்கான பிரசாரங்களைச் செய்யவும், இந்த மிருக குணம் படைத்தவர்களுக்கு வசதி அளிப்பது சர்வதேச ரீதியாக இயங்க முடிந்தும் நம்முள் இருக்கும் குழுவாத, தூய்மை வாதப் போக்குகளினால் ஐக்கியப் பட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்காமல் பிளவுபட்டிருக்கும் ஜனநாயக விரும்பிகளின் பலவீனமேயாகும். நமது மக்களுக்கு நிரந்தரமான சமாதானத்தையும் சுதந்திரத்தையும் உத்தரவாதமளிக்கக் கூடிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் அதற்கான பிரசாரங்களைச் செய்யவும் கூடிய பரந்த அமைப்புகளை உருவாக்குவது இன்றைய தேவையாக உள்ளது.

28.04.1991



## விளக்கேற்ற உதவுங்கள்

வடபகுதி மக்கள் மின்சாரம், எரிபொருள் இன்மையால் தமதில்லங்களில் விளக்கேற்ற வழியில்லாமல் படும் அவலத்தையை நேரில் பார்த்தால்தான் உணர முடியும். வவுனியாவுக்கப்பால் மின்சாரம் முற்றாகத் தடைப்பட்டு மாதங்கள் பல கடந்து விட்டன.

மண்ணெண்ணெய் போதிய அளவு கொண்டு செல்ல முடியாமையும் மின்சாரத் தடையுடன் இணைந்துவிட்டதால் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் வடபகுதி மக்கள் தமதில்லங்களில் சிறு ஒளியை ஏற்றுவதற்குக் கூட வசதியில்லாமல் தவிக்கின்றனர்.

வைத்தியசாலைக்கிச் செல்லும் நோயாளிகள் கூட விளக்குடன் வரும்படி கேட்கப்படுக்ன்றனர். தேங்காயெண்ணெய் விலையும் பல மடங்கு உயர்ந்துவிட்டது. மெழுகுதிரி கொண்டு செல்வதற்கான தடையும் நடைமுறையில் உள்ளது.

உணவுப் பொருள் விலை உயர்வால் அல்லலுறும் வட இலங்கை மக்கள் எரி பொருளுக்கும் அதிகம் செலவிட முடியாத அவல நிலையில் உள்ளனர். ஒவ்வொரு பொருளுக்கும் பல மடங்கு விலை கொடுக்கும் மக்கள் வீட்டில் சிறு பொழுதாவது விளக்கேற்ற வழிகாண வேண்டும்.

வீடுகளில் உள்ள சிறுகுழந்தைகள், நோயாளர்கள் போன்றோர் விளக்கு வசதியில்லாமல் அடையும் இடர்களை விபரிக்க முடியாது.

(ஆசிரியருக்கு கடிதத்திலிருந்து ஒரு பகுதி - வீரகேசரி)

## கடதாசித் திட்டங்கள் வேண்டாம்

"வட- கிழக்கு மாகாணசபை"க்கான பொருளாதாரத்திட்டங்கள் பற்றிய கருத்தரங்கு ஒன்று கொழும்பில் நடைபெற்றது!

வட-கிழக்கில் தொடரும் மோதல்கள் பேரழிவுகள் காரணமாக மக்கள் அகதிகளாவதும் அகதிமுகாம்கள் பல்கிப் பெருகுவதும் மக்கள் அத்தியாவசியத் தேவைகளுக்காக அலைந்து திரிவதையும் காணக் கூடியதாகவுள்ளது. இன் நிலையில் முதலில் கவனம் செலுத்த வேண்டியது புனர்நிர்மாணப் புனர்வாழ்புப்பணிகளேயாகும். இந்த விடயத்தில் மாற்றாந்தாய் மனப்பான்மைகளும் சறுக்கல்களும் தான் நடைபெறுகின்றன.

வெறுமனே திட்டங்களை மாத்திரம் தீட்டி கோவைகளில் அவற்றை அடுக்கி வைப்பது வெறும் நிருவாகிகளுக்கான பயிற்சியாக மட்டும் போய்விடக்கூடாது. செய்ய வேண்டிய காரியங்களைச் செய்த பின்னர் அமைதியுடன் திட்டங்களைத் தீட்டுவதுதான் விவேகமானதும் தேவையானதுமாகும். கடந்த காலங்களில் அபிவிருத்திகள் பற்றி எத்தனை "கடதாசித் திட்டங்கள்" கண்டோம் என்பதையும் நினைவுபடுத்துகின்றோம்.

வடகிழக்கு மாகாண மீன்பிடி அபிவிருத்தியை வகை மாதிரியாக எடுத்துக் கொண்டால் நாட்டின் 65%மான கரையோரப்பகுதி வட-கிழ்க்கு மாகாண எல்லைக்குள் அடங்குகின்றது. நாட்டின் மீன் உற்பத்தியில் 55% பங்கை வட-கிழக்கு மாகாணம் வகிக்கின்றது. ஆனால் நாட்டின் இன்றைய நெருக்கடி காரணமாக வட.கிழக்குப் பகுதி மீனவர்கள் கடலுக்குச் செல்ல வழியின்றி தத்தமது வீடுகளில் முடங்கிப் போய் கிடக்கின்றனர். அவர்களது வள்ளங்கள், படகுகள், மீன்பிடி வலைகள் யாவும் சேதத்துக்குள்ளாகி நஷ்டஈட்டை எதிர்பார்த்துள்ளனர். முதலில் மீனவர்களுக்கான நிவாரணத்தை வழங்கி மீன்பிடித் தொழிலை முன்னெடுத்துச் செல்வதற்கான சூழ்நிலையை உருவாக்குவதே இன்றைய அவசரத் தேவையாகும்.

விசேடமாக வடபகுதிக்கான யூரியா, எரிபொருள் வினியோகம் என்பன

www.padippakam.com

இடைநிறுத்தப்பட்டிருப்பதையடுத்து விவசாயச் செய்கை அங்கு உறங்கிப் போய்விட்டது. இவ்வருட நாட்டின் தேசிய உற்பத்தியில் வட-கிழக்குப் பகுதியின் பங்களிப்பை எதிர்பார்க்க முடியாத ஒரு நிலையில் அவற்றை முன்னேற்றுவதற்கான வழிவகைகளைக் காணாமல் வெறுமனே திட்டங்களில் மாத்திரம் கவனம் செலுத்துவது நோய்க்கான சிகிச்சையாக இருக்கமாட்டாது.

போக்கு வரத்து சீரின்மை காரணமாக வெங்காயம், உருளைக்கிழங்கு என்பன சந்தை வாய்ப்பின்றி வடக்கில் அழுகிப்போய் வீணாவதாக தெரியவருகிறது. இதே நிலையில் செத்தல் மிளகாய், உருளைக்கிழங்கு, வெங்காயம் எனபன கொழும்பில் கூடிய விலைகளிலேயே கொளவனவு செய்யக் கூடியதாகவுள்ளது.

நாட்டின் உருளைக் கிழங்கு உற்பத்தியில் சுமார் 20 வீதத்தை யாழ்ப்பாண மாவட்டம் ஈடு செய்து வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

கொழும்பிலும் நாட்டின் பிற இடங்களிலும் உபஉணவுப் பொருட்கள் இன்று இரண்டு மடங்காக விலையேறியுள்ளன. வட-கிழக்கு உற்பத்திப் பொருட்களின் சந்தை வாய்ப்பின்மை இவ் விலையேற்றத்திற்கான அடிப்படை காரணமாகும்.

இவற்றை சீர்செய்ய எடுக்கப்படும் நவடிக்கையானது மறுபுறத்தில் பொருளாதார முன்னேற்றத்துக்கு வழிசமைக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. வட - கிழக்கில் போராட்ட நிலமைகளே தொடருமானால் இத்தகைய திட்டமடல்களினால் எவ்வித பயனும் இருக்கப் போவதில்லை.

( வீரகேசரி 22.03.91 - ஆசிரிய தலையங்கத்திலிருநது ஒரு பகுதி )

## அரசின் திட்டமிட்ட கொலைகளையே நாம் கண்டிக்கின்றோம்

சர்வதேசமன்னிப்புச்சபை

அரசாங்கங்களையும், அவற்றை எதிர்க்கும் ஆயுதக் குழுக்களையும் சர்வதேச மன்னிப்புச்சபை ஒன்றாகக் கருதவில்லை. சர்வதேச மனிதவுரிமைகள் சட்டங்களின் முறைமையானது, அரசாங்கத்தினது பொறுப்புணர்ச்சிகள், கடப்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படைகளிலிருந்து எழுந்தவைகளாகும். அவற்றை ஆதாரமாகக் கொண்டவையாகும். அரசாங்கங்களைப் பொறுத்த வரை, தத்தமது நாட்டு பிரஜைகளுக்கும் சர்வதேச சமூகத்திற்குமான விசேட கடமைப்பாடொன்றுள்ளது அதாவது சர்வதேச மனிதவுரிமைகள் சட்டத்திலடங்கியுள்ள அடிப்படை அம்சங்களை பேண முற்படுவதாகும்.

சர்வதேச மன்னிப்புச் சபை ஸ்ரீ லங்கா தொடர்பாக வெளியிட்டுள்ள குற்றச் சாட்டுகளுக்கு, ஸ்ரீ லங்கா அரசாங்கத்திடமிருந்து எழுதப்பட்டுள்ள விளக்கங்களுக்கு மீண்டும் சர்வதேச மன்னிப்புச் சபை, அதன் நிலைப்பாடுகளை விளக்கி எழுதப் பட்டுள்ள கடிதத்தில் இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகரான திரு. பிரட்மன் வீரக்கோனுக்கு இக்கடிதம் சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகமான இயன் மாட்டினால் எழுதுப்பட்டுள்ளது.

இக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதானது:

ஸ்ரீ லங்கா அரசாங்கத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ள விளக்கங்கள் தவறானவையாகவும், அரசாங்கத்தின் அடிப்படைப் பிரச்சனையாக விளங்கும் மனிதவுரிமைகளைப் பேணுதலும் அதனை மதித்தலுமான கடமையிலிருந்து வழுவியவையாகவுமே கொள்ள வேண்டியுள்ளது.

ஆயுதக்குழுக்களின் நடவடிக்கைகளை நீங்கள் குற்றம் சாட்டியவாறு நாம் எந்த விதத்திலும் உற்சாகப்படுத்தியதோ நியாயப்படுத்தியதோ கிடையாது. இதற்கு மாறாக நாம் அவற்றின் நடவடிக்கைகளையும், மிகத் தெளிவாக எதுவித தெளிவீனங்களுக்கு இடமளியாது கண்டித்துள்ளோம்.

எதிர்ப்பு அணி ஆயுதக்குழுக்கள் அரசாங்கப்படைகளை தவிர்க்க முடியாத வகையில் கொலை மற்றும் கட்டு மீறிய நடவடிக்கைகளுக்கு தூண்டுவதாக முன்வைக்கப்பட்டுள்ள வாதமானது தவறானதும் ஆபத்தானதொன்றாகும்.

முதலில் எமது அறிக்கைகளில் அக்கறைக்குரிய கொலைகளாக நாம் குறித்திருப்பவை கட்டு மீறி அரச படையினர் பீதி காரணமாக செய்திருக்கும் கொலைகளையல்ல. நாங்கள் குறிப்பிட்டவை வேறுபட்ட கொலைகளையாகும். திட்டமிட்ட, வேண்டுமென்றே செய்யப்பட்ட கொலைகளையாகும்.

# புரட்சிகரப்பாரம்பரியத்தின் மறுமலர்ச்சி

*சமீபத்தில் ஐரோப்பா வந்திருந்த, நவசமசமாஜக்கட்சியின் பொதுச் செயலாளரான விக்ரமபாகு தோழ.கொலின் மீட்டுக்கு அளித்த பேட்டி.*

*நவசமசமாஜக்கட்சி பற்றிச் சிறிது விபரிக்க முடியுமா ?*

இலங்கையில் தேசிய விடுதலைக்காகவும், ஜனநாயகத்திற்காகவும் போராட்டங்களை நடத்தி, சக்தி மிக்க இயக்கமாக வளர்ந்த ரொட்ஸ்கியக் கட்சியான சமசமாஜக் கட்சியே எமது ஆரம்பமாகும். 1964ம் ஆண்டு இந்தக் கட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டரசாங்கம் அமைத்ததர்கள்.இது அந்தக் கட்சியுனுள் பாரிய குழப்பங்களை ஏற்படுத்தியது. பலர் அக்கட்சியை விட்டு வெளியேறினார்கள். நாம் கட்சியினுள் இருந்து கொண்டே கூட்டரசாங்கக் கொள்கைகளுக்கெதிராக போராட முயற்சித்தோம். 25 வருடங்களுக்குப்பின் நாம் புதிய சமசமாஜக்கட்சியாக வளர்ந்துள்ளோம்; பழைய கட்சி போல ஆதரவு எமக்கில்லாவிட்டாலும் நாம் ஒரு தனியான கட்சியாக உருவாகியுள்ளோம் - இலங்கையிலுள்ள பெரிய தொழிலாளவர்க்க சக்தியாகவும் வளர்ந்துள்ளோம்.

*இலங்கையில் ஒரு பலமான சமசமாஜ பாரம்பரியம் மக்கள் மத்தியில் உள்ளதா ? அதுபற்றியா நீங்கள் சொல்லுகின்றீர்கள் ?*

ஆம். "சமசமாஜம்" என்பதன் அர்த்தம் "சமத்துமான சமூகவமைப்பு" அல்லது கம்யூனிசம். இது ஒரு ரொட்ஸ்கிய பாரம்பரியம். நமது நாட்டிலுள்ள சகல கல்வியறிவுள்ள மக்களும் ரொட்ஸ்கி பற்றியும் நான்காவது அகிலம் பற்றியும் நன்கறிவார்கள். பிரித்தானியாவுக்கு எதிரான தேசிய விடுதலைப் போராட்டத்திற்கான பிரதான சக்தியாக அது இருந்தது, நாட்டில் உருவாகிய ஜனநாயகம் - மனிதஉரிமைகள், சமூகநல அரசு ஆகியவை... - இவையெல்லாம் இந்தக் கட்சியின் போராட்டங்களினால் ஏற்பட்ட பயன்களாகும். அதற்கொரு தனியான வெகுஜனப் போராட்ட பாரம்பரியம் உண்டு, 1960களில் எல்லோரும் புரட்சிகரமான ரொட்ஸ்கிய அரசாங்கம் உருவாகப் போகிறதென்று எதிராபார்தார்கள். ஆனால் எங்கள் தலைவர்கள் ஒரு குறுக்கு வழிப்பாதையைத் தேர்ந்தெடுத்தார்கள்; கூட்டு அரசாங்கம் அமைத்தார்கள். எல்லாக் கூட்டரசாங்கங்கள் போலவே அதுவும் தொழிலாளர்களுக்கெதிராகச் செயற்பட்டது. இறுதியாக உறிஞ்சப்பட்ட சக்கையாக வெளியே தூக்கியெறியப்பட்டார்கள்.

இது தொழிலாள வர்க்க இயக்கத்தின் வீழ்ச்சிக்கு இட்டுச் சென்றது, 1965ல் இருந்து, கடந்த 25 வருடங்களாக தோல்விக்கு மேல் தோல்விகளே ஏற்பட்டன. இந்த புரட்சிகர பாரம்பரியத்தின் வீழ்ச்சியினால் ஏற்பட்ட இடைவெளியானது, தமிழ், சிங்கள மக்கள் மத்தியில் - குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் - ஒரு நம்பிகையற்ற நிலமைகளை உருவாக்கியது. வீழ்ச்சியடைந்து கொண்டிருந்த பொருளாதார குழல்களில் அவர்களுக்கு எந்த வழியும் தென்படவில்லை, 1971ல் ஜனதாவிமுக்திபெரமுனவினால் வழிநடத்தப்பட்ட எழுச்சி ஏற்பட்டது. பிளவுபட்ட மாவோவாத குழுக்களிலிருந்து ஜனதாவிமுக்திப்பெரமுன உருவாகியது. அவர்கள் தம்மை மாவோவாதிகள் என்று அழைத்த போதிலும் அவர்களின் தளமாக படித்த வேலையில்லாத இளைஞர்களே இருந்தனர்.

இந்த எழுச்சியின் போது 10,000 இளைஞர்கள், சமசமஜக்கட்சி அங்கம் வகித்த கூட்டுஅரசாங்கத்தினால் கொல்லப்பட்டார்கள். சமீபகாலங்களில்; கடந்த ஐந்து வருடங்களாக இதேமாதிரயான துயர வரலாறு - தெற்கில் ஜனதாவிமுக்திபெரமுனவின் கிளர்ச்சியும் வடக்கில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டமும் - தொடருகின்றது. தெற்கில் ஜனதா விமுக்திப் பெரமுன தமிழர்களுக்கெதிரான சிங்களப் பேரினவாத

நிலைப்பாட்டை எடுத்தது. வறுமையையும், பொறுக்க முடியாத வாழ்க்கை நிலமைகளுக்கும் முகம் கொடுக்கும், இளம் பிராயத்தினரை இந்தப் போராட்டம் கவர்ந்தது. இம்முறை 40,000 சிங்கள இளைஞர்களும் 25,000 தமிழ் இளைஞர்களும் கொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

இரத்தம் பெருக்கெடுத்தோடிய இந்தக் காலகட்டத்தில்; நாம் நிதானமாகவும் உறுதியாகவும், சமசமஜக்கட்சியின் சிதைந்த பாரம்பரியம், கூட்டரசாங்கக் கொள்கை, சந்தர்ப்பவாத அரசியல் ஆகியவற்றிற்கெதிராகவும் ரொட்ஸ்கிய பாரம்பரியத்தின் மறுமலர்ச்சிக்காகவும் செயற்பட்டோம். 1977ல் சமசமாஜக்கட்சியிலிருந்து வெளியேறி ஒரு மகாநாட்டைக் கூட்டினோம். வேறுபாட்டைக் காட்ட, புதிய சமசமாஜக் கட்சி என எம்மை அழைத்துக் கொண்டோம். கடந்த தேர்தல்களில் நாம் பாராளுமன்ற மற்றும் மாகாணசபை ஆசனங்களுக்குப் போட்டியிட்டோம்; ஒரு பாராளுமன்ற அங்கத்தவரும் ஐந்து மாகாண சபை அங்கத்தவர்களும் ஒரு மாநகரசபை அங்கத்தவரும் இப்போது உள்ளனர். தனியார்துறையிலும் பொதுத்துறையிலும் தொழிற்சங்கவேலைகளில் ஈடுபடுவதுடன், சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் அடங்கிய தேசிய அமைப்பையும் கொண்டிருக்கின்றோம்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை நாம் வலியுறுத்தி வந்துள்ளோம். தமிழ் மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்த காரணத்தினால் சமீப காலத்திய வன்முறைகளின் போது ஜனதா விமுக்தி பெரமுனவின் தாக்குதல்களுக்குள்ளானோம். இந்தக் காலத்தில் எமது பதினேழு தோழர்கள் கொல்லப்பட்டார்கள். பலர் காயமடைந்தார்கள். கட்ச்சித்தலைவர் ஒருவரின் வீடு எரிக்கப்பட்டது. ஆனால் இந்த கஷ்டங்களுக்கூடாக பலமான ஒரு கட்சியாக வளர்ந்துள்ளோம்.

*அமைப்பாகிய தொழிலாளர்கள் என்று கூறும் பொழுது, சனத்தொகையில் எத்தனை வீதத்தினரைக் குறிக்கின்றீர்கள்? அமைப்பாகாத தொழிலாளர்கள் எவ்வளவு தொகையினர்?*

எமது சனத்தொகையில் 80%மானோர் கிராமவாசிகள், நகரப்பகுதிகளில் வாழும் 20%தினரில் அமைப்பாகியவர்கள் பற்றியே நாம் குறிப்பிடுகின்றோம். கிராமப்பகுதிகளிலேயே பெரும்பான்மையான தமிழ் தொழிலாளர்களைக் கொண்ட பெரும் தோட்டங்களும் இருக்கின்றன; றப்பர், தேயிலை வளரும் பிரதேசங்களில் சிங்களத் தொழிலாளர்களும் இருக்கின்றார்கள். நாங்கள் ஒரு தொழிலாளவர்க்கக் கட்ச்சியாக இருந்த பொழுதிலும் கிராமப்புறங்களில் எமக்குக் கணிசமான ஆதரவு இருக்கின்றது - எமது மாகாணசபை அங்கத்தவர்கள் பலர் கிராமப்புறங்களிலிருந்தே தெரிவாகியுள்ளனர், எமது பாராளுமன்ற அங்கத்தவரும் கிராமவாசிகள் பெரும்பான்மையான பிரதேசத்திலிருந்தே தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

*ஸ்ரீலங்காவில், தொழிற்சங்கங்கள் அரசியல் கட்சிகளுடன் தொடர்புடையனவையாக இருக்கின்றனவா ?*

ஆம், தொழிற்சங்கங்கள் கட்சிரீதியாகவே பிரிந்துள்ளன. இரு சம்மேளனங்கள் எமது கட்டுப்பாட்டிலுள்ளன.

தொழிற்சங்க சம்மேளனங்களும் முப்பது சங்கங்களும் இணைந்த சபையொன்று உண்டு. இந்த சபைகளுக்கு ஐவரைக் கொண்ட செயலாளர்சபையும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. எமது கட்சியைச் சேர்ந்த ஒருவரும், ஸ்ரீ.சு.கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக்கட்சி ஆகியவற்றைச் சேர்ந்த மூவரும், பிறிதொரு அமைப்பைச் சேர்ந்த ஒருவரும் இருக்கின்றனர்.

*எத்தனை தொழிலாளர்கள் இவ்வாறு அமைப்பாகியுள்ளனர் ?*

100,000 - 200,000 தொழிலாளர்களில் 15,000 தொழிலாளர்கள் இவ்வாறு அமைப்பாகியுள்ளனர். அரசாங்க சார்பு தொழிற்சங்கங்கள் உள்ளன. அவை இதில் பங்கு கொள்ளவதில்லை. அவர்களுக்கு பெரும் தொகையான அங்கத்தவர்கள் இருந்தாலும் செயற்பாடுகள் குறைவாகவே இருக்கின்றன.

*கிராமப்பகுதிகளில் உங்களுக்கு இருக்கும் ஆதரவு ஜனதாவிமுக்திப்பெரமுனவிலிருந்து அவர்கள் விலகிச் செல்வதைக் காட்டுகின்றதா ?*

ஜனதாவிமுக்திப்பெரமுன கிராமப்புறத்து படித்த, போர்குணமுள்ள இளைஞர்களைக் கொண்டிருந்தது.

இளைஞர்கள் மத்தியில் ஜனதாவிமுக்திபெரமுன ஆதரவாளர்களுக்கும் இடதுசாரிகளுக்குமிடையில் பிரிவு இருந்துவந்தது.

1964ல் சமசமாஜக்கட்சி தனது செல்வாக்கை( தலைமைத்துவத்தை) இழந்த பொழுது அதைத் தவிர்ந்த வேறு எந்தப் பரம்பரியமும் இருக்கவில்லை; முற்போகு இயக்கத்தின் தேவையொன்றும் உருவாகியது. ஜனதாவிமுக்திப்பெரமுனவின் தோற்றத்துடன் அதை ஆதரித்த பெரும்பான்மையினருக்கும் பழைய இடதுசாரிக் கொள்கைகளுடன் இருந்த சிறுபான்மையினருக்குமிடையில் பிரிவு உருவாகியது.

நாங்கள் இந்த இளைஞர்களை வென்றெடுக்க முயன்றோம். ஆனால் 1950 - 60 களில் இருந்தது போன்ற சமூக தளங்கள் எம்மிடமிருக்கவில்லை. இப்பொழுது பெரும் தொகையினருக்கு - பெரும் தொகையான இளைஞர்களுக்கும் ஜனதாவிமுக்திப்பெரமுனவிலிருந்து விலகுபவர்களுக்கும் - எமது கொள்கைகளைக் கூறக்கூடிய சூழ்நிலைமை ஏற்பட்டுள்ளது. சமீபகாலத்தில் தெற்கிலுள்ள பல்கலைக்கழகங்களில் பல வெற்றிகரமான கூட்டங்களை எம்மால் நடத்தக் கூடியதாக இருந்தது.

*கடந்த கால குழப்ப நிலைமைகளை வென்றுவிட்டதாக நீங்கள் நம்புவது போல இருக்கின்றது?*

கூட்டு அரசாங்கக் காலத்திற்குப் பின் அடுக்கடுக்கான பல தோல்விகளை நாம் சந்தித்தோம். ஆனால் அதிலிருந்து நாம், வலிமையுள்ள, மதிக்கப்படக்கூடிய, கணிசமான அங்கத்தவர்களைக் கொண்ட அரசியல் கட்சியாக வளர்ந்துள்ளோம். வெகுஜன இயக்கங்களுக்கும் தொழிலாள வர்க்கத்திற்கும் பொதுவான ஒரு பின்னடைவு நாட்டில் ஏற்பட்டிருந்தாலும், எமது கட்சியைப் பொறுத்தவரை இந்த வளர்ச்சி ஒரு வெற்றியாகும். நாங்கள் கருமவாதிகள் என்பதையும், கொள்கைகள் உடையவர்கள் என்பதையும் அவற்றிற்ககாகப் போராடத் தாயாராக இருப்பதையும் வெளிப்படுத்தியுள்ளோம். மக்கள் எங்கள் பக்கம் வந்து கொண்டிருக்கின்றார்கள்; நாங்கள் மாறுபட்ட ஒரு கொள்கையுடையவர்கள் என்பதையும் இன்றைய அமைப்பிற்கு ஒரு சவாலாக இருக்கின்றோம் என்பதையும் அவர்கள் உணருகின்றார்கள். இதை நாம் காணக் கூடியதாக இருக்கினறது; எமது கட்சியின் 13வது ஆண்டு விழாவை கொழும்பில் கொண்டாடிய பொழுது 5000 பேர்களை எதிர்பார்த்தோம், ஆனால் இதற்கும் அதிகமானவர்கள் வந்திருந்தனர். பல தூர இடங்களிலிருந்து, இளைஞர்கள் உட்பட, பல மக்கள் வந்திருந்தனர்.

*அரசாங்கத்தின் ஒடுக்குமுறைபற்றி என்ன சொல்லுகின்றீர்கள் ?*

ஜனத்தாவிமுக்திப்பெரமுனவையும் விடுதலைப்புலிகளையும் எதிர்த்துப் போராடுவதற்காகவென ஆரம்பிக்கப்பட்ட ஒடுக்குமுறை இன்னமும் தொடருகின்றது. தெற்கில் 40,000க்கும் மேற்பட்ட இளைஞர்கள் காணாமற்போயுள்ளனர். பலர் சிறைகளிலுள்ளனர். ஆட்கடத்தல்கள் இன்னும் தொடருகின்றன.

நான் ஸ்ரீலங்காவிலிருந்து புறப்படுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்புகூட, கொழும்புக்கு அருகாமையில் ஒரு புத்தபள்ளிக்கூடத்தில் படிப்பித்துக் கொண்டிருந்த ஒரு இளைஞன் மூன்று பொலிஸ் சீருடையணிந்தவர்களினால் கடத்தப்பட்டான். நாங்கள் பொலிஸ் நிலையத்திற்கும், பொலிஸ்சுப்ரீனரண்டிடமும் சென்று விசாரித்தோம்; தங்களுக்கு எதுவும் தெரியாது என்று கைவிரித்துவிட்டார்கள். மக்களை சட்டவிரோதமாக தாக்குவதற்கு இவ்விதமான ஒரு யந்திரத்தை அவர்கள் வைத்திருக்கிறார்கள்; வடக்கில் போர் தொடருகின்றது. தமிழ் மக்களுக்கெதிராக பயங்கர யுத்தத்தம் நடைபெறுகின்றது, தமிழ்பிரதேசங்களில் பட்டினி நிலவுகின்றது, நாள்தோறும் மக்களின் மரணங்கள் தொடருகின்றன.

*புலி இயக்கத்தினர் தமிழ்மக்களின் உண்மையான தலைமைத்துவத்தைக் கொண்டிருக்கின்றார்களா ?*

அவர்கள் தேர்தல்களில் பங்குகொள்வதில்லை, மற்றைய அமைப்புக்கள் மீது பயங்கரவாநடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றனர். எமது கட்சி தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்துள்ள போதிலும், எமது பிரபல்யமான

தமிழ்த்தலைவரை அவர்கள் கொன்றார்கள்; காரணம், அவருடைய பெயர் தேர்தல் அபேட்சகர்கள் பட்டியலில் இருந்ததுதான். மக்களின் ஆதரவினால் அவர்களிடம் தலைமத்துவம் வரவில்லை என்பது தெளிவாகின்றது; தங்களுடைய அதிகாரத்தை அவர்கள் இரக்கமற்ற பயங்கரவாதத்தின் மூலமே செயற்படுத்துகின்றார்கள். யாழ்ப்பாணப் பிரதேசத்தில் தங்களுடைய தலைமத்துவத்தையேற்படுத்தியுள்ளார்கள் ஆனால் மற்றைய பிரதேசங்களில் இந்த ஈவிரக்கமற்ற பயங்கரவாதத்தினால்கூட அதேமாதிரயான தலைமத்துவத்தைப் பெறமுடியவில்லை.

*தீவின் சகல பகுதிகளும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளனவா* '?

யாழ்ப்பாணத்தைத் தவிர்ந்த மற்றைய பிரதேசங்கள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. மற்றைய தமிழ்பிரதேசங்களில் நகரப்பகுதிகள் அரசின் கடட்டுப்பாட்டில் இருந்தாலும் கிராமப்பகுதிகளில் அதன் அதிகாரம் இரவுகளில்தான் இருக்கின்றது! ஆனால் முஸலிம் பகுதிகளில் தமிழ்பேசும் முஸ்லீம்கள் புலிகளுக்கு எதிராகவே உள்ளனர். முழுசனத்தொகையிலும் அவர்கள் 7%தினர், இதில் பாதிப்பங்கினர் கிழக்கு மாகாணத்தில் வசிக்கின்றனர். முஸ்லிம் காங்கிரஸ் போன்ற அமைப்புக்களும் சுயபாதுகாப்பு அமைப்புக்களும் தற்போது தோன்றியுள்ளன.

*புலிகள் தவிர்ந்த பிற தமிழ் குழுக்கள் உண்டா* ?

ஆம். பல குழுக்கள் உண்டு. சில தம்மை இடசாரி மார்க்சியக் குழுக்கள் என அழைத்துக் கொள்ளுகின்றன. இவர்களுடைய தலைவர்கள் புலி இயகத்தினரினால் படுகொலை செயப்பட்டதால் இவர்கள் புலிகளை வெறுக்கின்றார்கள். புலிகளில் இருக்கும் வெறுப்புக் காரணமாக சில அரசாங்கத்துடன் சேர்ந்துள்ளன. அரசாங்கத்திடமிருந்து பெறும் ஆயுதங்களுடன் சில இடங்களில் இவர்கள் புலிகளை எதிர்க்கின்றார்கள். இவற்றின்படி தமிழ் மக்கள் மத்தியில் தெளிவான வேறுபாடுகள் இருப்பதைக் காணமுடிகின்றது. புலிகள் தவிர்ந்த மற்றைய குழுக்களில் முக்கியமானது

### நான்காவது அகிலத்தின் உலக மாநாடு

நான்காவது அகிலத்தின் 13வது உலக காங்கிரஸ் 1991 பெப்ரவரி 7லிருந்து 17ம் திகதி வரை இத்தாலியில் நடைபெற்றது. 48 நாடுகளிலிருந்து 80 அமைப்புக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய பேராளர்களும் பார்வையாளர்களும் இதில் கலந்து கொண்டார்கள். மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் யுத்தநிலைமைகளினால் கலந்து கொள்ள முடியவில்லை. இவர்கள் எழுத்து மூலமான விளக்கங்களையும் செய்திகளையுமே அனுப்பியிருந்தனர்.

வளைகுடா யுத்தம் பற்றிய அறிக்கையுடன் மகாநாடு ஆரம்பமாகியது. அகிலத்தின் கிளைகள் யாவும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கெதிராக தங்கள் நாடுகளில் நடவடிக்கைகளில் ஈடுபடுவது தெளிவாகியது. போருக்கு எதிரான அறிக்கை ஒன்று இடதுசாரிப்புரட்சிகரசக்திகளுக்காக வெளியிடப்பட்டது.

சர்வதேச அரசியல் நிலைமை, லத்தீன் அமெரிக்கா, தேசிய விடுதலைப் போராட்டங்கள், சோவியத்யூனியன், கிழக்கயிரோப்பா, பெண்கள் இயக்கங்களின் இன்றைய நிலைமை உட்பட பல விடயங்களில் அறிக்கைகளும் விவாதங்களும் இடம்பெற்றன.

கிழக்கயிரோப்பாவில் ஏற்பட்ட மாற்றங்களினால் அந்த நாடுகளிலிருந்தும் பலர் மாநாட்டில் கலந்து கொண்டனர். செக்கோசாலோவாக்கியவின் 1968 வசந்தப்புரட்சியின் முக்கிய போராளியாகி சிறைசென்ற பீட்டர் ஊல், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் "மார்க்சிஸமேடை குழுவை"ச்சேர்ந்த இருவர் உட்பட பல கிழக்கயிரோப்பிய மார்க்சியவாதிகளும் பார்வையாளர்களாக சமூகம் கொடுத்திருந்தனர்.

சோவியத்யூனியனில் லியோன் ரொட்ஸ்கியின் புத்தகங்கள் வெளியிடப்படும் சரித்திர முக்கியத்துவ நிகழ்வு குறிப்பிடப்பட்டது.

*** அடுத்த சிந்தனை இதழில் அகிலத்தினுள் தொடர்ச்சியான விவாதத்திற்காக விடப்பட்டிருக்கும் விக்ஞாபனத்தின் தமிழாக்கம் வெளிவரும் ***

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியாகும். மாகணசபைத் தேர்தல்களுக்குப்பின் - சகலரும் பங்குகொள்ளாதபடியால் இதை ஜனநாயக தேர்தல் என்று கூறமுடியாவிட்டாலும் - மாகாணசபையில் இவர்கள் அதிகாரம் பெற்றார்கள். பாராளுமன்றத்திலும் ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியின் பிரதிநிதிகள் உள்ளனர். பாராளுமன்றத் தேர்தலில் புலிகளல்லாத குழுவினர்கள் வெற்றி பெற்றார்கள். ஆனால் புலிகள் ஜனநாயகநடைமுறைகள் செயற்படுவதைத் தடைசெய்கின்றார்கள். ஆகையினால் புலிகள்தான் தமிழ் மக்களின் தனித் தலைவர்கள் என்ற கூற்றில் உண்மையில்லை.

*தமிழ் பிரதேசங்களில் ஆளும் கட்சியோ அல்லது மற்றைய முதலாளித்துவக் கட்சிகளோ செயறபடுகின்றனவா ?*

முன்பு அவை செயற்பட்டன, மாகாணசபை தேர்தல்களில் அவைகள் குறிப்பிட்டளவு வாக்குகளைப் பெற்றன. ஆனால் பல அமைப்பாளர்கள் புலி இயக்கத்தினால் கொல்லப்பட்டார்கள். இங்கு முக்கியமானது ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுமல்ல. தமிழ்முதலாளித்துவக் கட்சிகள்; வயதுமூத்தவர்கள், மத்தியதரவர்க்கத்தினர், விவசாயிகள் ஆகியோரது ஆதரவைப் பெற்றிருந்தன மறுபுறத்தில் இடதுசாரி அமைப்புக்கள் முற்போக்கு விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியோரது ஆதரவைப் பெற்றிருந்தன. ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றிற்கிருந்த ஆதரவை விட்டுவிட்டாலும் தமிழ் முதலாளித்துவக் கட்சிகளுக்கு கணிசமான ஆதரவு இருந்து வந்தது, விடுதலைப்புலிகள் இவர்களுக்குப் போட்டியாக வர முனைவதுடன், தமிழ் மக்களின் ஏகபிரதிநிதியாக தன்னை உருவாக்கிக் கொள்ள மற்றைய குழுக்களை அழிக்கின்றது.

*அவர்கள் இதில் வெற்றி பெற்றுள்ளனரா ?*

ஆம், சில குழுக்கள் இப்பொழுது செயற்படுவதில்லை. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஒரளவு செயற்படுகின்றது மற்றைய அமைப்புக்கள் அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கின்றன.

*தமிழ்ப்பிரதேசங்களில் உங்களால் அரசியல் வேலைசெய்யக் கூடியதாக இருக்கின்றதா ?*

இரகசியமாக மட்டும் செய்ய முடிகின்றது; எமது மாதாந்தப் பத்திரிகையை எம்முடம் தொடர்புள்ளவர்களுக்கு அனுப்பி வருகின்றோம். விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளினால் பகிரங்க அரசியல் இப்பொழுது சாத்தியமில்லை.

*இன்றைய அரசாங்கம் ஸ்ரீலங்கா முதலாளித்துவத்திற்குத் தலைமை தாங்குகின்றதா?*

இல்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தேசிய முதலாளித்துவக் கட்சியாகும்; பல்தேசியக் கம்பனிகளுடன் தொடர்புடைய தரகு முதலாளிகளுடைய கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சியும் இருக்கின்றது. இது தமிழ் முதலாளிகளுடனும் தொடர்புகளைக் கொண்டுள்ளது. ஆனால் கொள்கையளவில் அவர்கள் சிங்களப்பேரினவாத நிலைப்பாட்டைக் கொண்டுள்ளதுடன் தமிழ் மக்களின் சுதந்திரக் கோரிக்கைகளையும் ஈவிரக்கமின்றி ஒடுக்குகின்றார்கள். இன்றைய போரில் தமிழ் மக்கள் ஈக்கள் போலக் கொல்லப்படுகின்றார்கள். புலிஇயக்கத்தினரின் தனிக்குழு வாதத்தினால் இதற்கு தீர்வு காணமுடியாதிருக்கின்றது. ஏனெனில் அவர்கள் இந்தக் கொள்கையைக் கைவிடுவார்களானால், இன்று அரசிற்கெதிரான ஒரு மாபெரும் எதிர்ப்பியக்கத்தைக் கட்டியெழுப்ப முடியும். அவர்கள் இந்திய முதலாளித்துவத்தில் நம்பிக்கை வைத்தார்கள், அதுவும் அவர்களைக் கைவிட்டுவிட்டது. தங்களது சந்தர்ப்பவாத அரசியலுக்காக அவர்களுக்குப் புகலிடம் கொடுத்த தமிழ் நாட்டு மானில அரசையும் மத்திய அரசு கலைத்துவிட்டது. இப்போது அங்கே புலிகள் தேடப்படுகின்றார்கள். இந்தியாவில் புலிகளுக்கு இருந்த ஆதரவு குறைந்து விட்டது. ஆகையினால் சிங்கள - தமிழ் ஐக்கியப்பட்ட போராட்டத்தின் மூலமே இன்று வெற்றி பெறலாம்.

*ஒடுக்கு முறைபற்றி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு என்ன ?*

தமிழர்களை ஒடுக்குவதற்கு அவர்கள் மறைமுகமான ஆதரவைக் கொடுக்கின்றார்கள். அரசாங்கம் தமிழர்களை ஒடுக்கிய பின், "குற்றமற்றவர்களாக" தாங்கள் அதிகாரத்திற்கு வரலாமென அவர்கள் எண்ணுகின்றார்கள். உண்மையில் அவர்களுடைய கட்சி என்றும் சிங்களம் மட்டுமென்ற கொள்கையைக் கொண்டதாகவே இருக்கின்றது. எனினும் 1957ல் பண்டாரநாயக்க அன்றைய தமிழ் தலைவருடன் ஒரு ஜனநாயகரீதியான தீர்வைக்காண முயன்றார். அந்த ஒப்பந்தம் தமிழர்களுக்கு ஒரு குறிப்பிட்டளவு சுயாட்சியையும் தமிழ் மொழிப்பாவனையையும் உறுதிப்படுத்தியது. அன்றைய எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி இதை எதிர்த்ததுடன் அது நடைமுறைப்படுத்தப்படுவதையும் தடுத்தது. அதன் பின்பு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இனவாதக் கட்சியாகவே இருந்து வந்தது. ஆனால் கூட்டு அரசாங்கம் நடைபெற்ற காலத்தில் சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளின் நிர்ப்பந்தத்தினால் அதன் இனவாதம் சற்றுக் குறைவாக இருந்தது. சிங்கள மத்தியதர வர்க்கத்தினரின் செல்வாக்கு அதிகமாக உள்ள இந்தக் கட்சி சிங்கள பேரினவாதத்தையே கடைப்பிடிக்கின்றது.

*தேசிய இனப்பிரச்சனையில் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைப்பாடு என்ன ? அவர்களுக்கு எத்தகைய ஆதரவு உண்டு ?*

1987ல் நாங்கள், கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக்கட்சி, ( தமிழ் மக்களின் மொழி மற்றும் சுயாட்சி சம்பந்தமாக ஸ்ரீலாங்கா சுதந்திரக் கட்சி கடைப்பிடித்த பேரினவாதக் கொள்கையை எதிர்த்து அதிலிருந்து தொழிலாள தளங்களுடன், ஒரு சமூகஜனநாயகக்கட்சியாக வெளியேறிய) மக்கள் கட்சி ஆகியவற்றுடன் ஒரு ஐக்கிய முன்னணி அமைத்தோம். தமிழ்மக்களுக்குப் பிரிந்து போகும் உரிமை, தமிழ் மொழிக்கான தேசிய அந்தஸ்து, மாகாணசபைகளுக்கு அதிகாரங்களைப் பரவலாக்குதல் ஆகிய கொள்கைகளை இந்த ஐக்கிய முன்னணி கொண்டிருந்தது. அப்பொழுது கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை இவற்றிற்கு ஆதரவாக இருந்தது.

கம்யூனிஸ்ட் கட்சியும், சமசமாஜக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடனும் கூட்டு ஏற்படுத்த வேண்டுமென்ற கொள்கையினாலும், மக்கள் கட்சி மனிதஉரிமைகள் சம்பந்தமாக ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒரு தந்திரோபாயரீதியான உடன்பாட்டிற்கு வரமுனைந்ததாலும் அந்த ஐக்கிய முன்னணி உடைந்தது. ஆகையினால் கம்யூனிஸ்ட் கட்சியும் சமசமாஜக்கட்சியும் தற்பொழுது தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நிலைப்பாட்டுடன் ஒத்துப்போவதாகவே கருதவேண்டியுள்ளது. இத்தனை வேற்றுமைகளுக்கு மத்தியிலும், ஒடுக்குமுறை, பொருட்களின் விலையேற்றம், கூட்டுத்தாபனங்களைத் தனியார் மயப்படுத்துதல் ஆகிய அரசின் நடவடிக்கைகளுக்கு எதிராக ஒரு எதிர்ப்பு முன்னணியை உருவாக்க முயலுகின்றோம்.

கம்யூனிஸ்ட் கட்சியும் சமசமாஜக்கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு விடுத்த அழைப்பு பயனளிக்காதபடியால், மேற்குறிப்பிட்ட மூன்று விடயங்கள் சம்பந்தமான எதிர்ப்பு நடவடிக்கைகளினாலேயே எதிரணியினரை ஒன்றிணைக்கலாம் என்பதை உணர்ந்துள்ளனர். இது சம்பந்தமாக தமிழ் முஸ்லிம் அமைப்புக்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளோம்.

புலி இயக்கம் தவிர்ந்த மற்றைய அமைப்புக்கள் இந்த நடவடிக்கைகளில் பங்கு கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளன. புலி இயக்கம் மட்டும் தங்களுடைய குழுவாதத்தினால் இதிலிருநது ஒதுங்கியுள்ளனர். ஒரு பொதுவான நடவடிக்கையை உருவாக்க முடியுமானால் அது மக்களை அணிதிரட்ட உதவும்.

நாங்கள் கூட்டு அரசாங்கத்திற்கு எதிரானவர்கள். கூட்டு நடவடிக்கைகளையே நாம் முன்மொழிகின்றோம் - பொதுக்கூட்டங்கள், ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், வேலை நிறுத்தங்கள்; இவற்றினால் உருவாகும் வெகுஜன இயக்கத்தினாலேயே அரசாங்கத்தைத் தோற்கடிக்கலாம். இதில் சிறிது நம்பிக்கை இருக்கின்றது. இதுவரை ஒரு பொதுக்கூட்டத்திற்கு திட்டமிட்டுள்ளோம்.

# கிழக்கு - மேற்கு ஜேர்மன் இணைவின் விளைவுகள்

1989 இறுதிப் பகுதியில் இருந்து, உலககெங்கிலுமுள்ள - முக்கியமாக ஜேர்மன் - முதலாளித்துவ பிரசாரத்தில் முக்கிய பங்கை வகித்த கிழக்கு மேர்க்கு ஜேர்மன் இணைப்பு இன்று பூர்த்தியாகிவிட்டது.

கிழக்கு ஜேர்மனியில் அரசுக்கெதிராக ஏற்பட்ட ஆர்ப்பாட்டங்கள், அதைத் தொடர்ந்த பேர்லின் மதிலின் தகர்வு, மேற்கு ஜேர்மனிக்குள் கிழக்கு ஜேர்மனியர்களின் வருகை, கொனேக்கர் அரசாங்கத்தின் சரிவு..... இவைகள் எல்லாம் கம்யூனிச எதிர்ப்புப் பிரசாரங்களாக, முதாலாளித்துவத்தின் சிறப்புத்தன்மையை மேலும் உயர்த்துவதாகப் பிரசாரம் செய்யப்பட்டன.

ஸ்டலினிசமும் அதைத்தொடர்ந்த குருட்டுச் சித்தாந்தச் சீரழிவுகளும் முதலாளித்துவத்தின் வெறும் வாய்க்கு "அவல்" கொடுத்து உதவியிருந்தன.

கிழக்கு ஜேர்மன் மக்கள் மேற்கு ஜேர்மனியுடன் இணைந்து சகல சம்பத்துடன் சுபீட்சமாக வாழப்போகின்றார்கள் என்ற மாயையை மேற்கு ஜேர்மன் அரசியல்வாதிகள் ஏற்படுத்தி தமது பலத்தையும் பெருக்கிக் கொண்டார்கள்.

கிழக்கு - மேற்கு ஜேர்மனிகள் இணைந்துவிட்டன!

இன்று, ஒரு வருடம் கூடப்பூர்த்தியாவதற்கு முன், தமது எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாத கிழக்கு ஜேர்மன் மக்களின் விரக்தி வில்வரூபமெடுக்கும் சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. கிழக்கு ஜேர்மனியை விழுங்கிய முதலாளித்துவ மேற்கு ஜேர்மன் அரசின் விஷப்பற்களின் தன்மையை இப்பொழுதான் மக்கள் உணர ஆரம்பித்துள்ளன்ர்.

மேற்கு ஜேர்மனியில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் கிழக்கு ஜேர்மனியில் குவிக்கப்பட்டதன் விளைவாக அங்கு உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சந்தையிலிருந்து துரத்தப்பட்டன. அத்துடன் மேற்கு ஜேர்மனன் பொருட்களுக்கு இடமளிக்க, சோவியத்யூனியன் மற்றும் கிழக்கயிரோப்பிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களும் நிறுத்தப்பட்டன. இதன் விளைவாக அந்த நாடுகளுக்கான கிழக்கு ஜேர்மனியின் ஏற்றுமதியும் தடைப்பட்டது. கிழக்கு ஜேர்மனியின் 70%மான ஏற்றுமதி கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று கொண்டிருந்தது. இந்த ஏற்றுமதி வீழ்ச்சியுடன் இந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மூலப்பொருட்களுக்கு நேரடியாகப் பணம் கொடுக்க வேண்டிய நிலமையும் உருவாகியுள்ளது.

இவற்றின் விளைவாக கிழக்கு ஜேர்மன் தொழில் உற்பத்தி 50%தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. 1990ல் தேசிய வருமானம் 22%தினால் வீழ்ச்சியடைந்தது. ஒரு சில மாதங்களில் பத்து லட்சம் தொழிலாளர்கள் தமது வேலைகளை இழந்தனர்.

இவை ஏற்படுத்தக் கூடிய தாக்கங்கள் யாவும் இதுவரை சமூகஉதவிகளினால் சமாளிக்கப்படுகின்றன. வயோதிபர்களுக்கு ஒய்வூதியமும், தொழிற்சாலைகளிலிருந்து மீளவும் வீட்டு வேலைகளுக்கு அனுப்பப்படும் பெண்களுக்கு பணஉதவிகளும் அளிக்கப்படுகின்றன. பல பிள்ளைப் பராமரிப்பு நிலையங்கள் மூடப்பட்டு விட்டன. இந்த நடவடிக்கைகளினால் - இப்படி வேலையிலிருந்து நீக்கப் பட்டவர்களைத் தவிர்த்து - 760,000 பேர்களே ( 9% மானோர்) உண்மையில் வேலையில்லாது இருக்கின்றனர் எனக் அரச பிரசாரம் காட்டுகின்றது. 19 இலட்சம் பேர் குறைந்த நேரவேலை செய்ய வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுடைய வருமானம் 10%தத்தால் குறைக்கப்பட்டுள்ளது. 700,000 அரச ஊழியர்கள், சம்பளத்தில் 70%மான ஒய்வூதியத்துடன் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். இப்படியான மறைமுகமானதும் வெளிப்படையானதுமான வேலையில்லாமை 40%மான தொழில் செய்யக்கூடியவர்களைப் பாதித்துள்ளது. இந்த நடவடிக்கைகள் பலர் எதிர்பார்த்த பொருளாதார சுபீட்சத்திற்குப் பதிலாக வறுமையையே பரிசளித்துள்ளது.

தொழிற்சாலைகளின் மூடுவிழாக்கள் இப்பொழுது ஆரம்பமாகியுள்ளன. இந்தக் கோடைகாலத்தில் பலர் அனுபவிக்கும் சம்பளத்துடனான விடுமுறைகள் வேலைநீக்கமாக மாறலாம்!


www.padippakam.com

இந்த வருட ஆரம்பத்தில் பலர் உண்மை நிலமைகளை உணர ஆரம்பித்தனர். பெரும்பான்மையினர் மத்தியில் நம்பிக்கையின்மையும் விரக்தியுமே தென்பட்டன. பெரும்பான்மையான இளைஞர்கள் தேர்தல்களில் வாக்களிப்பதில் அக்கறை காட்டவில்லை. வாக்குக் கணிப்புகள், தற்பொழுது அதிகாரத்திலிருக்கும் சி.டி.யு (கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி) 8%மான வாக்குகளை (42% இருந்து 34%க்கு) இழந்துள்ளதையும், பிரதான எதிர்க்கட்சியான எஸ்.பி.டி ( சமூக ஜனநாயகக்கட்சி) 11%த்தால் ( 22% இருந்து 33%க்கு) தனது ஆதரவைப் பெருக்கியுள்ளதையும் காணக் கூடியதாக உள்ளது. வலதுசாரி 'றிப்பப்பளிக்கானருக்கும்' ஆதரவு கூடியுள்ளதையும் இனவாத பாசிச வளர்ச்சிகளையும் காணக் கூடியதாக இருக்கின்றது.

வேலைநீக்கங்கள்

கார்ல் சைய்ஸ் (Carl Zeiss) தொழிற்சாலையில் உள்ள தொழிலாளர்கள் தொகை 29,000லிருந்து 5000 மாகக் குறைக்கப்படுமென அறிவிக்கப் பட்டவுடன் 20,000 தொழிலாளர்கள் வீதிகளில் ஆர்ப்பாட்டம் செய்தனர். இதே போன்று ஈர்பூர்ட் (Erfurt) தொழிற்சாலையில் 50,000 தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்ததுடன் தொழிற்சாலைகளுள் அமர்ந்தும் கொண்டனர் ( உள்ளிருப்பு போராட்டம்) . மற்றைய பல சிறு தொழிற்சாலைகளிலும் இப்படியான போராட்டங்கள் நடைபெற்றன. இந்த நடவடிக்கைகள் யாவும் தொழிலாளர்களினால் (ஜேர்மனியில் உள்ள முறைப்படி, தொழிற்சாலையிலுள்ள அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்ய) தேர்ந்தெடுக்கப்பட்ட சபைகளினாலேயே நடத்தப்பட்டன. பெரும்பான்மையான இந்தச் சபைகள் சென்ற வருட ஆரம்பத்திலேயே தெரிவுசெய்யப்பட்டதால் அன்றிருந்த உணர்வுகளையே பிரதிநிதித்துவப் படுத்துகின்றன. பெரும்பான்மையான அங்கத்தவர்கள் முதலாளித்துவக் கட்சிகளின் ஆதரவாளர்கள். அதனால் இந்த நடவடிக்கைகளை அவர்கள் ஒரு எதிர்ப்பு நடவடிக்கைகளாகவே நடத்துகின்றார்கள்.

அதே சமயம் "மேற்கு" ஜேர்மன் தொழிற்சங்கத்தலைமைகளின் கைகளிலுள்ள தொழிற்சங்கங்களும் இந்த நடவடிக்கைகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டன! கப்பல் கட்டும் தொழிலாளர்கள், அரச ஊழியர்கள், இரசாயனத்



வேலைநீக்கங்களுக்கெதிராக 'கிழக்கு' ஜேர்மன் தொழிலாளர்களின் ஆர்ப்பாட்டம்(நன்றி:ஈ.ஜி. மெட்டால்)

தொழிலாளர்கள் ஆகியோரின் ஆர்ப்பாட்ங்களை தொழிற்சங்கங்கள் தொடர்ந்தன.

மார்ச் மாதம் 11ம் திகதி திடீரென "லைப்சிக்" நகரில் வேலையிழந்த25,000 பேர்களின் ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது. இங்குதான் 1989 இலையுதிர்காலத்தில் ஸ்டலினிசத்திற்கெதிரான ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பமாகின. ஒவ்வொரு திங்கட் கிழமைகளிலும் ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்தன. மற்றைய இடங்களிலும் இந்த நடவடிக்கைகள் பரவின. 300,000 மக்கள் வீதிகளில் ஆர்ப்பாட்டம் செய்தனர். ஆனால் இந்த ஆர்ப்பாட்டங்கள் எதுவித அமைப்புமின்றியே தொடருகின்றன. இதற்குத் தலமை தாங்க "மேற்கு" ஜேர்மன் தொழிற்சங்கங்களும் எஸ்.பி.டி.யும் முழுமுயற்சிகளை எடுக்கின்றன. ஒரு வேளை இவர்கள் இதில் வெற்றும் பெறலாம். இது எவ்வளவு தூரம் சாத்தியமாகலாம் என்பது பி.டி.எஸின் ( பழைய கம்யூனிஸ்ட் கட்சி ) நடவடிக்கைகளிலும் தங்கியிருக்கின்றது. மார்ச் மாதம் பேர்லின் நகரில் பி.டி.எஸ் ஏற்பாடு செய்த ஆர்ப்பாட்டத்தில் 30 - 50,000 மக்கள் திரண்டிருந்தனர். இன்று ஏற்பட்டுவரும் இந்த எழுச்சியை இவர்கள் சரியாகப் பாவிக்காது விட்டால் தொழிலாளவர்க்கத்திலிருந்து நிரந்தரமாகவே அன்னியப்படும் நிலை இவர்களுக்கு ஏற்படலாம்.

ஆட்சியாளருக்கு எதிர்வரும் கோடை காலம் உஷ்ணமிக்கதாகவே இருக்கும்!

*- வசந்தன்*



படிப்பகம்

# புதிய அரசியல் வியாபாரிகள்

வரலாற்றுப் பாடங்களை எந்த வகையிலும் ஏற்க மறுத்து மீண்டும் ... மீண்டும் தவறிழைத்தலையே தமது செயல்பாடுகளாக தமக்குத் தாமே 'புத்திஜீவிகள்' என்று மகுடம் சூட்டிக் கொண்ட சிலரும் தம்மைத் தாமே முற்போக்காளர்கள் அல்லது முற்போக்கு அமைப்புக்கள் என்று பட்டம் போட்டுக் கொள்ளும் சிலரும் செய்துவருகின்றனர்.

தமிழ்பேசும் மக்களின் போராட்டம் பலமுனைகளிலும் நலிவுற்றிருக்கும் இன்றைய நிலையில் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க முயலும் இவர்களின் செயல்கள் பகிரங்க விவாதத்துக்கு உள்ளாக்கப்படவேண்டியவையேயாகும்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தினை தமிழ்பேசும் மக்களின் தேசிய இயக்கமாகக் கொள்ளவேண்டும்..... விடுதலைப் புலிகளே தேசியப் போராளிகள் என்ற இவர்களின் கருத்து மிகக் கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

இதர அமைப்புக்கள் பலவீனமுற்றிருக்கும் இந்த வேளையில் பலமான அமைப்பாக காட்டப்படும் விடுதலைப் புலிகளுக்கு முட்டுக்கொடுப்பதன் மூலம் தமது அரசியல் இருப்பை காப்பாற்றிக் கொள்வதே இத்தகையோரது நோக்கமாகவுள்ளது.

ஆனால் இவர்களது இந்தச் செயல் தமிழ்பேசும் மக்களுக்கு இழைக்கப்படும் மிகமோசமான வரலாற்றுத் துரோகமாகும்.

ஈழப்பிரதேசங்களில் தம்மை இயங்க அனுமதிக்காத புலிகளின் ஜனநாயகமற்ற தன்மையை மாத்திரம் பிழை எனக்கூறும் இந்த 'புத்திஜீவிகளோ' அல்லது அவர்கள் சார்ந்த அமைப்புகளோ இதர அமைப்புக்கள் மீது புலிகள் அராஜகத்தைப் பிரயோகித்து அவ்வமைப்புக்களின் போராளிகளைக் கொன்று குவித்து அமைப்புகளைத் தடைசெய்தபோது எவ்விதமான எதிர்ப்பையோ கண்டனத்தையோ வெளிப்படுத்தவில்லை. மாறாக மௌனமான தமது ஆதரவையே வழங்கினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

'சிந்தனையில்' ஏற்கனவே குறிப்பிடப்பட்டது போல இவர்கள் மக்களிடையே வாழ்ந்து மக்களுக்காகவே உழைத்த தோழர்கள் அண்ணாமலை, விஜயானந்தன் போன்றவர்கள் புலிகளால் படுகொலை செய்யப்பட்டபோது மாத்திரம் மௌனமாகவிருக்கவில்லை. அன்று பரியோவான் கல்லூரி அதிபர் ஆனந்தராஜாவிலிருந்து நேற்று திருமதி.ராஜனி திராணகம வரை பல நூற்றுக்கணக்கானோர் புலிகளால் படுகொலை செய்யப்பட்டபோதும் மௌனமாகவே இருந்தார்கள். இந்த மோசமான அராஜகங்களுக்கெதிராக மக்களை திரட்டவில்லை. சர்வதேச அரங்கில் இக்கொடுமைகளை அம்பலப்படுத்தவில்லை.

இவை மாத்திரமல்ல துணுக்காயிலும், சாவகச்சேரியிலும் இப்போது ஆனைக்கோட்டையிலும் புலிகள் சித்திரவதை முகாம்களைத் திறந்து மாற்று இயக்கத்தவர்களையும் தமக்கு முரணான கருத்துக்கொண்டவர்களையும் அடைத்து வைத்து சித்திரவதை செய்துவருவது பற்றி இவர்கள் மூச்சுவிடுவதில்லை.

தமிழ் தேசிய இராணுவத்தில் கட்டாயமாகக் சேர்க்கப்பட்ட நூற்றுக் கணக்கான தமிழ் இளைஞர்களை சிறீலங்கா விசேட அதிரடிப்படையினருடன் இணைந்து புலிகள் கொன்று குவித்ததோ அல்லது சிறீலங்கா அரசுடன் இணைந்து அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், சாம் தம்பிமுத்து போன்றவர்கள் கொல்லப்பட்டதோ இவர்களது 'அரசியல் பார்வை'களுக்குத் தென்படவில்லை. அப்பாவிச் சிங்கள மக்கள் மீதான புலிகளின் படுகொலைகளும், முஸ்லீம் மக்களை புலிகள் அடித்து விரட்டியதும்கூட இவர்களால் அலட்சியப்படுத்தப்பட்டன.

மொசாட்டுடனான புலிகளின் தொடர்பு, சர்வதேச போதை வஸ்துக் கடத்தல் கும்பல்களுடன் இணைந்த புலிகளின் செயற்பாடுகள், புலிகளின் உள்நாட்டு வெளிநாட்டு அடக்குமுறைகள் இவை அனைத்தையும் இவர்கள் அலட்சியப்படுத்தி புலிகளின் இந்திய எதிர்ப்பையும்(?), சிறீலங்கா எதிர்ப்பு(?) நடவடிக்கைகளையும் முதன்மைப் படுத்தி புலிகள் இயக்கத்தை தேசிய இயக்கமாகக் பிரகடனப்படுத்துகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

ஆனால் இதில் கூட நியாயமிருக்கிறதா? புலிகள் இந்தியாவுக்கோ, சிறீலங்கா அரசுக்கோ எதிரானவர்களல்ல. இவர்கள் கூறுகின்ற இந்திய ஆதிக்கத்துக்கோ அல்லது சிறீலங்கா அரசின் அடக்குமுறைகளுக்கோ புலிகள் எதிரானவர்களில்லை. தமது சொந்த நலன்களுக்காக தேவைக்கேற்றவகையில் எதிரிகளை நண்பர்களாகவும், நண்பர்களை எதிரிகளாகவும் மாற்றிக் கொள்பவர்களே புலிகள் என்பதை இந்த 'புத்திஜீவிகள்' மூடி மறைக்கின்றனர்.

புலிகளின் தலைமையே 'இந்தியாவுடன் புலிகள் மேற்கொண்ட யுத்தம் துரதிர்ஸ்டவசமானது' என்றும் 'புதிய இந்திய அரசுடன் நட்புறவை மேற்கொள்ள புலிகள் காத்திருப்பதாகவும்' அறிக்கைகள்விடும் புலிகளை இந்திய எதிர்ப்பாளராக இந்த புத்திஜீவிகள் காட்ட முயற்சிப்பது வேடிக்கையானது.

அதுபோலவே சிறிலங்கா அடக்குமுறை அரசுக்கு எதிராக புலிகள் மாத்திரமே நின்று போராடுவதாகக் கூறும் இவர்கள் புலிகள்-சிறிலங்கா அரசு இணைந்த பதினான்கு மாதகாலத்தில் நடந்தவைபற்றி விவாதிக்க மறுப்பதேன்? சர்வதேச அரங்சில் குறிப்பாக ஜெனிவா மனிதஉரிமைகள் அரங்கம் போன்ற இடங்களில் ஐ.தே.க அரசு தனது சொந்தமக்களையே ஆயிரக் கணக்கில் கொன்றொழித்தபோது அந்த அரசுக்கு நல்ல பிள்ளை பட்டமும் பிரேமதாசாவை சமாதானத்தின் காவலனாகப் பிரகடனம் செய்ததும் இதே புலிகள்தானே. அதுமட்டுமா இப்போதும் கூட இரகசியத் தூதுவர்கள் மூலம் சிறீலங்கா அரசுடன் போர்நிறுத்தம், பேச்சுவார்த்தை என்று உடன்பாடு காணமுனைவது புலிகள் தானே. இத்தகைய நடவடிக்கைகளின் போதேல்லாம் இவர்கள் கூறும் சிறிலங்காவுக்கெதிரான புலிகளின் நடவடிக்கைகள் எங்கே போயிற்று.

அடக்குமுறையின் மறுவடிவமான புலிகள் தமது போராட்டத்தில் தம்மை இணைக்கவில்லை என்று அங்கலாய்க்கும் இந்த 'புத்திஜீவிகளும்''முற்பேக்காளர்களும்'தேவைக்கேற்றவகையில் இந்திய எதிர்ப்பையும் இதரகோசங்களையும் எழுப்பிக் கொண்டு பழைய சந்தையில் புதிய வியாபாரிகளாகியுள்ளனர்.

ஆரோக்கியமான அரசியல் விவாதங்களின் அடிப்படையில் ஆக்கபூர்வமான செயல்திட்டங்களின் கீழ் தாங்கொணா துன்பங்களினால் தவிக்கும் எம் மக்களுக்கு தீர்வு ஒன்றினைக் காணுதல் அவசியமே ஒழிய பரல்பர விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்றவகையிலோ அன்றி தமது இருப்பினை வலியுறுத்துவதற்காகவோ இந்தப் 'புத்திஜீவிகளும்' 'முற்போக்காளர்களும்'இயங்குவார்களேயானால் எம்மக்களின் வாழ்வு மீளவே முடியாத அதால பாதாளத்தில் அமிழ்த்தப்படும்: என்பதை நினைவு கொள்ளவேண்டும்.

*- காந்தன்*

## இந்தியாவின் நண்பர்கள் ?

சதாசிவம் கிருஷ்ணகுமார் (கிட்டு) ஏப்ரல் மாதம் 16ம் திகதி தொலைபேசி மூலம் "இந்து" பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது," பேச்சுவார்த்தைக்கான எந்தவொரு முன்நிபந்தனையையும் நாம் ஏற்கமாட்டோம். முன்நிபந்தனைகள் எதுவும் இல்லாமல் பேச்சுக்கு அழைப்பு விடுக்கப்பட்டாலே அது சாத்தியமாகும்.
இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏதாவது பேச்சு நடக்குமானால், இந்தியா போன்ற வலிமைமிக்க பெரிய நாடொன்றின் மத்தியஸ்தத்துடனேயே நடைபெற வேண்டுமென்று நாம் விரும்புகின்றோம்.
இலங்கை முன்னர் விடுத்த ஆயுதத்தைக் கீழே போடுதல், பேச்சு வார்த்தையில் பிரபாகரன் பங்கேற்க வேண்டும், இதர தமிழர் குழுக்களுடனும் பேச்சு நடத்தப்படும் என்ற மூன்று நிபந்தனைகளையும் நாம் நிராகரித்து விட்டோம். எனவே ஏதாவது பேச்சு நடைபெறுமானால் அது முன் நிபந்தனைகள் இல்லாததாகவே இருக்க வேண்டும்."

புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த காசி ஆனந்தன் சென்னையில் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பது,:
"இந்திய அமைதிப்படையுடன் ஏற்பட்ட மோதல்கள் ஆழ்ந்த வருத்தத்திற்குரியவை. நாங்கள் இந்தியாவின் பக்கமே இருக்க விரும்புகிறோம். இந்தியாவின் நலனுக்கெதிராக நாம் என்றும் செயல்பட்டதில்லை. விடுதலைப்புலிகளுக்கும் இந்திய அமைதிப்படைக்கும் எதிரான மோதல்கள் எமது வரலாற்றில் மிகவும் துரதிர்ஷ்டவசமானது. இரு தரப்பினரும் முற்றாக அதை ஒரு கெட்ட கனவாக மறந்து விட வேண்டும். நாங்கள் எப்பொழுதும் டெல்லியுடன் எமது தொடர்புகளை வைத்திருக்வே விரும்புகின்றோம்."

www.padippakam.com

# கலாசாரம் பற்றி.

## தொண்ணூறுகளில் நமது இளைஞர்களுக்கான கலாசாரம்

அஜித் சமரநாயக்க

கடந்த ஒரு தசாப்த காலத்தில் மேற்கத்தைய ஜனரஞ்சக கலாசாரம் இலங்கையை நோக்கி வெள்ளம் போல பிரவகித்து வந்திருக்கின்றது. சமகால சிங்கள கலாசாரத்தின் பிரச்சினை, இந்த உட்பாய்ச்சலை எப்படி சமாளிப்பது என்பதாகவே இருந்தது. ஆலயங்களை மையமாக கொண்ட பாரம்பரிய கலாசாரம் இனியும் இளைய தலைமுறையினரை கவர்ந்திழுப்பதாக தெரியவில்லை. சராசரி டி.வி. நாடகங்கள் இந்த எளிமையான, மதத்தின் அடிப்படையிலான பண்பாட்டு பாரம்பரியத்திற்கு உயிரூட்டுவதற்கு எவ்வளவு தான் முயன்றாலும் அது சாத்தியமாகும் என்று தோன்றவில்லை. வெகுஜன கலாசாரத்தின் பகட்டுமிக்க வெளிப்பாடுகளான பொப்இசை, காமிக்ஸ் பிரசுரங்கள் போன்றவற்றை நோக்கி இளைய தலைமுறை தொடர்ந்து கவரப்பட்டுச் செல்கிறது. விமர்சகர்கள் இதனை 'இன்ப வேட்கை மனப்பான்மை' என்று வர்ணிக்கிறார்கள்.

ஆனால், ஏற்கனவே கதவுகள் அனைத்தும் திறக்கப்பட்டுவிட்டன. இப்பொழுது இதற்கு எவரும் ஒன்றும் செய்ய முடியாது. கடிகாரத்தை பின்னால் திருப்புவது சாத்தியமில்லை. நாடு மீட்சி பெறுவதற்கே வழி தென்படாத கொச்சைக் கலாசாரமென்ற கொள்ளை நோயினால் பீடிக்கப்பட்டிருக்கும் யதார்த்த நிலைக்கு முன்னால், தேசிய சிந்தனை ஆதரவாளர்களின் விரக்தியையும், முதலாளித்துவத்துக்கு முந்திய பாரம்பரிய வாழ்க்கை முறைக்கு திரும்பிச் செல்ல வேண்டும் என்ற அவர்களுடைய ஏக்கத்தையும் புரிந்து கொள்ள முடியும். ஆனால், புதியதொரு வாழ்க்கை மாதிரியை சுவைத்துப் பழகிவிட்ட இன்றைய தலைமுறையினரை அதிலிருந்து பிரித்து, சீர்திருத்தி, பழைய வாழ்க்கை முறையை பின்பற்றுமாறு தூண்ட முடியுமா என்பது விவாதத்துக்குரிய ஒரு விஷயமாகும்.

> **மதயிற்போக்குத்தனங்களுக்கு மாற்றீடான கலாசாரம் தேவை.**
>
> மதயிற்போக்குத்தனங்களை எதிர்கொள்ளக் கூடிய வழிவகைகளை நாம் மற்றறைய குழுக்களுடன் இணைந்து தேடுகிறோம். மக்கள் மத்தியில் ஊறியிருக்கும் பலமான சமய மற்றும் கலாசார குறியீடுகளுக்கு மாற்றீடாகக் கொடுக்கக்கூடிய கலாசாரங்கள் தேவையாக உள்ளன.
>
> மிஹூர்தேசாய் உடன் ஒரு பேட்டி. சிந்தனை 1/91

சிதைந்து, உணர்வற்றுப் போயிருக்கும் உயர் கலாசாரத்தையும், வெகுஜன கலாசாரதின் சாபக்கக்கேடுகளையும் தவிர்த்து நடுநிலை கலாசாரமொன்றை போஷித்து வளர்ப்பதே இன்றைக்குள்ள ஒரே நம்பிக்கையாக தெரிகிறது. இந்த புதுவகை கலாசாரம் இசை, சினிமா போன்ற கலை வடிவங்களில் வெளிப்படத் தொடங்கியிருக்கிறது. இவையிரண்டும் நவீன தொடர்பு சாதனங்கள் என்பது ஒரு தற்செயல் நிகழ்வல்ல. புனைகதை போன்ற பாரம்பரிய ஊடகங்களிலும் மாறிவரும் கலாசார சூழ்நிலையைப் பிரதிபலிக்கச் செய்வது மிக முக்கியமாகும். நகரங்களின் வெகுஜனங்களின் கலாசாரத்தின் வெறுமைக்கு எளிதல் இரையாகக் கூடிய நகர்ப்புற இளம் தொழிலாளர் படித்த கிராமப்புற இளைஞர், சமூகத்தின் ஏனைய பிரிவினர் என்போரின் நலனை கருத்தில் கொண்டு அதிகளவில் புனைகதைகளும் கவிதைகளும் படைக்கப்பட வேண்டும்.

(18ம் பக்கம் பார்க்க)



படிப்பகம்

www.padippakam.com



# பிரெஞ்சுப் புரட்சி (1789 - 1798)

பத்தொன்பதாம் நூற்றாண்டின் சிந்தனைகளையெல்லாம் ஆட்கொண்ட ஒரு நிகழ்வு பிரெஞ்சுப் புரட்சியாகவே அமைந்தது. 1789ல் ஏற்பட்ட இந்த நிகழ்வு மக்கள் தங்கள் செயற்பாட்டினால் சமூகமாற்றங்களை ஏற்படுத்தலாம் என்பதை ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு உண்மையாக்கியது. அது ஏற்படுத்திய மாற்றங்கள் ஐரோப்பிய மக்களுக்கு மறக்கமுடியாத அனுபவங்களாயின. அந்த நூற்றாண்டின் முற்போக்கு அரசியல் கோட்பாடுகளான ஜனநாயகம், தேசியவாதம், சமூக சட்டதிட்டங்கள் எல்லாம் புரட்சிகர பிரான்சின் நடைமுறைகளாயின!

## புரட்சிக்கான காரணிகள்

இந்தப் புரட்சிக்கு இட்டுச் சென்ற சமூக காரணிகள் எவை?

லூயி மன்னர்களின் தேவையற்ற போர்களினால் பெரும் கடனாளியாகிவிட்ட முடியரசும் மன்னர் குடும்பமும் நாட்டின் சமூக அமைப்பின் உச்சியில் இருந்தனர். இந்த மன்னர் ஆட்சிக்கு நிலப்பிரபுக்களும், மிகப்பெரிய நில உடமைகளைக் கொண்டிருந்த கிறிஸ்தவ மடாலயத்தினரும் ஆதரவாக இருந்தனர். ஆனால் சர்வதிகார மன்னன் தம்மிடமிருந்து எடுத்துக் கொண்ட அரசியலுரிமைகளை மீளப்பெறுவதில் நிலப்பிரபுக்கள் கண்ணாக இருந்தனர். அதே சமயம் அவர்கள், அரசிலும் மடாலயங்களிலும் தாம் வகித்து வந்த அதிஉயர்ந்த பதவிகளின் பயனாக சாதாரண விவசாய மக்களை கசக்கிப் பிளிந்து நிலங்களிலிருந்து பெறும் சகல நன்மைகளையும் அனுபவித்துக் கொண்டிருந்தனர். இவர்களுக்கெதிராகவே இந்தப் புரட்சி வெடித்தது.

இந்தப் புரட்சிக்கு வளர்ந்து கொண்டிருந்த முதலாளித்துவ வர்க்கமே தலைமை தாங்கியது. வியாபாரிகள், வங்கிச் சொந்தக்காரர்கள், தொழில் நிர்வாகிகள் ஆகியோர் நகரப்பகுதிகளில் பொருளாதாரத்திலும் அறிவியல் விடயங்களிலும் முக்கிய பங்கினை வகித்துக் கொண்டிருந்தனர். சர்வதிகார மன்னனின் ஆட்சியும், நிலப்பிரபுக்களின் அரசியல் அதிகாரங்களும் இந்தப் புதிய வர்க்கத்தினரின் வளர்ச்சிக்குப் பெரும் முட்டுக் கட்டைகளாக இருந்தன.

நாட்டின் சனத்தொகையில் 80%மானவர்கள் விவசாயிகளாகயிருந்தனர். இவர்களில் பெரும்பான்மையினர் நிலமற்றவர்கள். அவர்களின் வாழ்க்கை தாங்க முடியாத துன்பங்கள் நிறைந்ததாகவே இருந்தது.

நகரப்பகுதிகளில் சிறு தொகையினராகிய தொழில் நிர்வாகிகள், கடைக்காரர்கள், சிறு தொழில் செய்வோர் வாழ்ந்து வந்தனர். அங்கும் பெருபான்மையினர் உழைக்கும் ஏழைகளாகவே இருந்தனர். இவர்களில் ஒரு சிறு தொகையினரே தொழிற்சாலைகளில் வேலைசெய்பவர்களாக இருந்தனர்.

நிலப்பிரபுத்துவ ஆளும் வர்க்கத்தினர் மத்தியில் ஏற்பட்ட உள்முரண்பாடுகளும், புதிதாக பொருளாதார ரீதியாக வளர்ந்து வந்த முதாலாளிகளும், இனிமேல் தாங்க முடியாத துன்பங்களுக்கு முடிவுகாண எழுந்த மக்களின் நடவடிக்கைகளும் புரட்சிக்குககான காரணிகளாக அமைந்தன.

## புரட்சியின் ஆரம்பம்

நிலப்பிரபுக்கள் தங்களது அதிகாரங்களை அதிகரிப்பதற்காக அரசனுக்கெதிராக எடுத்த நடவடிக்கைகளே எழுச்சிக்கு வித்திட்டது. அரசின் கடன்களை அடைப்பதற்கு மன்னன் எடுக்க இருந்த



படிப்பகம்

நடவடிக்கைகளை நிலப்பிரபுக்கள் ஆதரிக்க வேண்டுமாயின் பிரபுக்களின் அதிகாரங்களும் சலுகைகளும் அதிகரிக்கப்பட வேண்டுமெனக் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். இந்த நெருக்குவாரத்திற்குத் தீர்வுகாண (பதினாறாவது லூயி) மன்னன் செயலற்றிருந்த அரசசபையை கூட்டும் நிர்பந்தத்திற்குள்ளானான்.

இந்தச் சபையில் நிலப்பிரபுக்களும், கிறிஸ்தவ மடாலயத்தைச் சேர்ந்தவர்களும், பிரபுக்களல்லாத சாதாரண பிரமுகர்களும் இருந்தனர். சர்வதிகார மன்னர்கள் 1614ம் ஆண்டுக்குப் பின் இந்தச் சபையைக் கூட்டாமலே தமது சர்வதிகார ஆட்சியை நடத்தி வந்தனர். அதனால் இந்தச்சபையும் செயலிழந்து இருந்தது.

மன்னனின் தீர்மானத்தின் பயனாக, 1789ல் நடைபெற்ற இந்தச் சபைகளுக்கான தேர்வுகள் சாதாரணமக்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்புக்களையும் ஏற்படுத்தியது. தெய்வத்தின் பிரதிநிதியான மன்னன் சபையைக் கூட்டி தமக்கு நன்மைகள் பல செய்யப்போவதாக அவர்கள் நம்பினார்கள்! இந்தச் சபை 1789 மேமாதம் 5ம் திகதி கூட்டப்பட்டது. சபையில் பிரபுக்களல்லாத சாதாரண உறுப்பினர்கள் தமது கோரிக்கைகளை முன்வைத்தனர். ஆனால் அவைகள் யாவும் மன்னனினாலும் பிரபுக்களினாலும் புறக்கணிக்கப்பட்டன. இதனால் விரக்தியுற்ற சாதரண பிரதிநிதிகள் 1789 கோடைகாலத்தில் தம்மை ஒரு தேசியசபையாகப் பிரகடணப்படுத்தினர். இந்தத் தேசிய சபை முழு பிரெஞ்சு மக்கள் சார்பாகக் குரல் கொடுப்பதாகக் கூறினார்கள். இந்தப் புரட்சிகரமான நடவடிக்கை நகரப்பகுதி முதலாளிகளின் ஆதரவை மட்டுமல்லாது உழைக்கும் ஏழைகள், விவசாயிகள் எல்லோருடைய ஆதரவையும் பெற்றது. பிரபுக்களின் ஒடுக்கு முறையின் கீழ், நில அடிமைகளாக, சொல்லொணாத் துயர்களை அனுபவித்துக் கொண்டிருந்த இந்த ஏழைமக்களின் ஆதரவானது, இந்த எழுச்சியை ஒரு நகரப்பகுதி மக்களின் நடவடிக்கையாக மட்டும் குறுக்காது நாடுபரந்த புரட்சியாக மாற்றியது.

18ம் நூற்றாண்டில், ரூசோ போன்ற சித்தாந்தவாதிகளின் சுலோகங்களான "சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்" என்பவை, முதலாளித்துவ தலைவர்களின் கோஷங்களாயின. இந்த சுலோகங்களினால் உந்தப்பட்ட வெகுஜன எழுச்சிகள் சமத்துவமற்ற அடக்குமுறைச் சமூக அமைப்பான நிலஉடமையாளரின் அதிகாரத்தை துக்கியெறிய முனைந்தது.

## சிறைக்கூடதகர்ப்பு

எழுச்சி பெற்ற பாரீஸ் மக்கள் 1789 ஜுலைமாதம் 14ம் திகதி அரசின் அதிகாரத்தின் சின்னமாக விளங்கிய "பஸ்லே" (Bastille) சிறைக்கூடத்தை தகர்த்தனர். இந்த நடவடிக்கை சர்வதிகாரத்திலிருந்து மக்கள் தம்மை விடுவிக்க எடுத்த முதல் நடவடிக்கையாகவும் அமைந்தது. இதைத் தொடர்ந்த கிரமப்பகுதி விவசாயிகளின் நடவடிக்கைகள் நிலவுடமையாளர்களின் அதிகாரங்களை உடைத்தெறிந்தன.

தெய்வீகத் தன்மைவாய்ந்த மன்னனுக்கு ஆட்சியுரிமை என்றதை மாற்றி எல்லோரும் மனிதர்கள், சாதாரண பிரஜைகளுக்கும் உரிமைகள் உண்டு என்பதை நகரப்பகுதி முதலாளித்துவ மற்றும் மத்தியதர வர்க்கத்தினரும் பிரகடணப்படுத்தினர். ஆனால் தனியுடமையின் புனிதத்தன்மையினையும் முக்கியத்துவத்தையும் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

தேசிய சபை அரசியல் யாப்பு வரைவதில் முக்கியமாக ஈடுபட்டது. அது கிறிஸ்தவ மடாலயங்களின் நிலங்களை தேசிய சொத்தாக்கியது. நிலப்பிரபுத்துவ அதிகார அமைப்புக்களை இல்லாமல் செய்தது. பிரசுரங்கள் மீதான தணிக்கைகள் ஒழிக்கப்பட்டன. பிதிநிதித்துவ அரசாங்கங்கம் உருவாக்கப்பட்டது. முதலாளித்துவப் பொருளாதாரம் தங்குதடையின்றி வளர சகல சட்டமூலங்களும் உருவாக்கப்பட்டன. முதலாளித்துவ மிதவாதிகள் இந்த மாற்றங்களை சட்டரீதியாக அதிகாரங்கள் குறைக்கப்பட்ட மன்னனின் தலைமையில் தொடரவே விரும்பினார்கள்.

இந்தச் சபையின் காலம் 1789லிருந்து 1791 வரை நீடித்தது.

(தொடரும்)

www.padippakam.com

# தேசிய சிந்தனை வேண்டாம். நவசிந்தனை வேண்டும்.

– டயன் ஜயத்திலக

இலங்கையைப் போன்ற சமூகங்களில் எப்பொழுதும் ஏதோ ஒரு வடிவத்திலான தேசிய சிந்தனை முனையொன்று நிலவி வரும் குறிப்பாக, ஆசிய சமூகங்களில் (மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின் ஆகியோர் கூறியவாறு) எப்பொழுதும் பின்னோக்கிய பிற்போக்கு சித்தாந்தங்களை வெளிப்படுத்தும் ஒரு சமூகப் பிரிவினர் இருந்து வருவர். இது பெரும்பாலும் முதலாளித்துவ வளர்ச்சியினால்- குறிப்பாக தங்கியிருக்கும் முதலாளித்துவத்தின் வளர்ச்சியால்- ஏற்படுவதொன்றாகும். இந்த வளர்ச்சி பல்வேறு முரண்பாடுகளைத் தோற்றுவித்து, பராம்பரிய சமூக சக்திகளில் சிதைவினையும் வீழ்ச்சியையும் ஏற்படுத்தி வருகிறது. அத்துடன் புதிய சமூகசக்திகளை உருவாக்குகிறது. வீழ்ச்சியடைந்து கொண்டு செல்லும் சமூக சக்திகள் எப்போதும் தேசிய சிந்தனையுடன் ஒத்த சித்தாத்தங்களை முன்வைப்பதுண்டு.

மார்க்ஸ் இதனை முன்கூட்டியே விளக்கியிருந்தார். மானியமுறை சார்ந்த அல்லது குட்டி பூர்ஷ்வா சோஷலிசம், முதலாளித்துவத்துக்கு எதிரான சித்தாந்தங்கள் என்பன பற்றி அவர் குறிப்பிட்டுள்ளார். மார்க்சைப் பொறுத்த வரையில், இந்த சோஷலிச மாதிரிகள் பிற்போக்கானவையாகும்.

இதன் ஒரு விஸ்தரிப்பினையே இங்கு நாங்கள் காண்கின்றோம். தங்கியிருக்கும் முதலாளித்துவ வளர்ச்சியை அனுபவித்திராத நாடுகளிலும் இதனை காண முடிகிறது. இன்றைய சோவியத் யூனியனும், கிழக்கைரோப்பாவும் பெருமளவுக்கு 'ஜாதிக சிந்தனய' முறையை ஒத்த சில பெரித்ஸ்ரோய்கா எதிர்ப்புப் போக்குகளை காட்டிவருகின்றன.

ஆகவே, எமக்கு எத்தகைய 'சிந்தனை' இப்பொழுது தேவையாக இருக்கிறது? நிச்சயமாக, 'தேசியசிந்தனை' அல்லாத ஒரு சிந்தனையே அது. இலங்கையை, பரந்த சமூக அரசியல் கருதுகோளில் பார்க்கும் ஒரு சிந்தனையாகவே அது இருக்கவேண்டும். இலங்கை தேசியம் குறித்து எம்மால் பேச முடியாவிட்டாலும் ஒரு தனி இலங்கைச் சமூகம் என்றவரையில் எம்மால் பேசமுடியும். இது தேசியங்களைக் கொண்ட, முஸ்லீம் மக்களை கருத்திற் கொண்டு, பல்லின சமூகமாக அது இருக்கும், ஆகவே இந்த இலங்கைச் சிந்தனை, ஒரு பல்தேசிய சிந்தனையாக மிளிர வேண்டும். தேசிய சிந்தனையாக அல்ல.

ஒரு பல்லின சித்தாந்தமே இன்றைய தேவை. பல்லினத்தன்மைக்கு அங்கீகாரமளிப்பதனை அடிப்படையாகக் கொண்ட சித்தாந்தமாக அது இருக்கும். எமக்கு பல்லின, பல்தேசிய நவீன, சர்வதேசிய மனப்பான்மை ஒன்று இப்பெழுது தேவை. ஒரு நவீன ஜனநாயக மனப்போக்குத் தேவை. தேசிய சிந்தனையின் இடத்தில் இதுவே இருக்க வேண்டும். அந்த நவசிந்தனையையே நான் சிபார்சு செய்கின்றேன்.

**"தேசிய சிந்தனை" என்றால் என்ன ?**

*"தேசிய சிந்தனை என்பது சிக்கலானது; ஆனால் அது விளக்க முடியாத ஒரு கருத்தாக்கமல்ல."*

*"எமது தேசிய சித்தாந்தம் என்றால் என்ன என்று கேட்கும் இளைஞர்களுக்கு ஒரு சுருக்கமான பதிலை தரமுடியும். அதாவது, இரண்டாயிரம் வருடங்களுக்கு மேலாக உருவாகி, வளர்ந்து வந்துள்ள சிங்கள பௌத்த சித்தாந்தமே எமது தேசிய சித்தாந்தமாகும்."*

*"இந்நாட்டில் பௌத்த அரச அமைப்பு உறுதியானதாக இருந்த கால கட்டங்களில், மக்கள் அந்த சித்தாந்த்தினால் போஷிக்கப்பட்டு, அர்த்தமுள்ள வாழ்க்கையை நடத்தி வந்திருக்கிறார்கள் என்பதனை எமது வரலாற்றின் பல கட்டங்களும் எடுத்துக் காட்டுகின்றன. பலம் பொருந்திய, நீதியான மன்னரொருவரின் கைகளில் அரச அதிகாரம் இருந்த பொது தேசிய ஒற்றுமை காணப்பட்டது. கோயில்களும் குளங்களும் நிர்மாணிக்கப்பட்டன. சாதாரண மக்கள் அர்த்தமுள்ள, ஒழுக்க வாழ்வு வாழ்ந்தார்கள். மகா பராக்கிரமபாகுவின் ஆட்சிக்காலம் அத்தகையதாகும்."*

- குணதாஸ அமரசேகராவின் " இருண்ட இரவில் விடியலின் கதிர்களை காண்கிறேன்" என்ற நூலிலிருந்து பொருளில் நோக்கில் பிரசுரமாகியது.



படிப்பகம்

www.padippakam.com

(16ம் பக்கத் தொடர்ச்சி)

இதில் இன்னொரு முக்கியமான அம்சமிருக்கின்றது. 1950 களிலும் 1960 களிலும் நடுத்தர வர்க்கத்தினரே கலாசாரத்தை உருவாக்குபவர்களாக இருந்தனர். அவர்களின் பணி காரணமாகவே புனைகதை மற்றும் நாடகத்துறைகளில் மறுமலர்ச்சி தோன்றியது? ஆனால், 1980 களில் விசை மையம் இடம் மாறியிருக்கின்றது. இளைஞர்கள் பெருமளவுக்கு பிடிவாதம் கொண்டவர்களாக மாறியிருக்கிறார்கள். இளைஞர்களில் ஒரு பிரிவினர் தீவிரவாத ஜனரஞ்சகவாதத்தினால் கவர்ந்திழுக்கப்பட்டுள்ளனர். மற்றொரு பிரிவினரோ அபரிமிதமாக பெருகிவரும் இன்னிசை மாலைப் பொழுதுகளில் மயங்கித் திளைந்து வருகின்றனர். ஆனால், தறிகெட்டுச் செல்லும் ஒரு சந்ததியினர் என்று இவர்களை நாங்கள் கைவிட்டு விட முடியுமா? நிச்சயமாக, பாரம்பரிய அல்லது உயர் கலாசாரம் குறித்த சொற்பிரயோகங்களுடன் கூடிய ஒரு வேண்டுகோள் அவர்களிடம் எடுபடப்போவதில்லை. சனத் தொகையின் பரவலான பிரிவினரை கவர்ந்திழுக்கக் கூடிய நடுத்தர கலாசாரமொன்று குறித்து தீவிரமாக சிந்திப்பதற்கு இப்பொழுது தருணம் வந்திருக்கிறது.

குறிப்பு:

பேர்லின் நகரில் காலம் சென்ற றிச்சாட் டி சொய்சாவின் ஞாபகார்த்தமாகக் கூட்டப்பட்ட ஒன்று கூடலில் "கலாசாரம்" பற்றிய கலந்துரையாடல் இடம் பெற்றது. அதையொட்டி மேலும் விவாதங்களைத் தொடருமுகமாக, அமைப்பாளர்களினால், சில கட்டுரைகளும் வினியோகிக்கப்பட்டன.

இந்தக் கலந்துரையாடல்களை மேலும் தொடருமுகமாக "பொருளியல் நோக்கு" என்ற சஞ்சிகையில் வெளியான சில கட்டுரைகளின் சில பகுதிகளை இங்கு வெளியிடுகின்றோம்.


சிந்தனை

வாசகர்களிடமிருந்து ஆக்கங்களையும் விமர்சனங்களையும் சிந்தனை வரவேற்கின்றது.

சிந்தனையில் வெளியாகும் ஆக்கங்களின் கருத்துக்கள் அவற்றை ஆக்கியோரின் சுதந்திரமான கருத்துக்களேயாகும்.


ஆறு இதழ்களுக்கான அன்பளிப்பு 20 டி.எம்.

தொடர்புகளுக்கு:

SINTHANAI
Haussmannstr.107,
7000 Stuttgart 1.
GERMANY.


# இரண்டாவது பிறப்பு

அருந்தி



## ஒரு பார்வை

ஈழம் கலைகள் சமூக விஞ்ஞானக் கழகம் (ஆசியா - பிரானஸ்) அருந்ததியின் பதினெரு கவிதைகளைக் கொண்ட தொகுப்பொன்றை வெளியிட்டுள்ளது. அருந்ததியின் கவிதைகள் ஏற்கனவே பல ஐரோப்பிய சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளன. இதுவே இவரது முதலாவது ஐரோப்பிய வெளியீடாகும்.

காளிதாஸ்.

வாழ்வின் அர்த்தங்களை இழந்து கொண்டிருக்கும் மறுக்கப்பட்ட எமது வாழ்வில் வாழ்விற்காகவும், மரித்துக் கொண்டிருக்கும் மனித நேசத்திற்காகவும் புதுமை தாகத்துடன் ஏங்கிக் குரல் கொடுக்கும் கவிதை வரிகளை இவரது கவிதையில் காணுகிறோம்.

இவரது கவிதைகளில் பெரும்பாலானவை ஏக்கத்தையும் இழப்பையும் இவற்றுடன் கூடிய கேலியையையும் வெளிப்படுத்துவனவாக மாத்திரம் இருந்த போதிலும் அவற்றினுள் ஒளிரும் நம்பிக்கைகளையும் கவிஞரது சமூகப்பிரக்ஞையையும் அக்கவிதைகளிலிருந்து வெளிப்பட்டு நிற்பதைக் காண்கிறோம்.



படிப்பகம்

இக்கவிதைகளில் வெளிப்படுத்தப்படும் விரக்தி, ஏக்கம், கோபம், நம்பிக்கை, கேலி என்பனவெல்லாம் எமது நிகழ்காலத்தின் உண்மையான சாட்சியங்கள். இவை பொய்யான வரிகளல்ல.

ஏக்கமும் நம்பிக்கையும் ஒருங்கே ஒலிக்கும் "நம்பிக்கை" என்னும் கவிதையில் இருப்பு மறுக்கப்பட்ட நிலையிலும் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இரவல் வாழ்வின் விரக்தி வெளிப்படுத்தப்படுகிறது.

நினைவுகளில்
இடறி வீழ்வதும்
எழுவதும்....
வானம் தொடும் பூமியின்
தூரமாய்....
இருந்தும் இன்னும்
தளராதவைகளாய்.......
புதிது புதிதாக
இடறுவது எழுவதும்
உயிர்ப்பிலிருக்கும்

சில நாட்களுக்காய்..... போன்ற வரிகள் கனமான நாட்களை நகர்த்திக் கொண்டிருக்கும் எமது நிஜதரிசனங்களைக் காணும் வரிகள்.

குறுகிய வீதிகள், சந்துகள்
மண் ஒழுங்கைகள் எல்லாமே
பதித்த எம் சுவடுகளை இன்னும்
பாதுகாத்துவைத்திருக்குமோ?....

இவை "இறந்த காலங்கள்" என்கின்ற கவிதையின் வரிகள். இந்த ஏக்கமான வரிகள் தாய் மண்ணை பிரிந்த மனங்களின் அடியில் துயிலும் இறக்காத துயரத்தின் வெளிப்பாடுகள். இறந்தகாலத்தின் இனிமையினையினும் நிகழ்காலத்தின் விரக்தியையும் அழகாக கூறி இறுதியில் எதிர்காலம் மீதான நம்பிக்கையுடன் முடிகிறது இக்கவிதை.

"சின்னக் குடிசைகள்
உலகை வசப்படுத்திய
அந்தக் காலங்களில்தான்
நாம் நாமாக இருந்தோம்.
ஏழ்மை வாழ்வாயினும் எமது ஊர்களில்
நின்மதியுடன் வாழ்ந்த காலங்களில்
எமது வாழ்வு எம்மிடமிருந்தது.

இறந்தகாலங்களில் எம்மை மகிழ்வித்த அந்த மகிழ்ச்சிக் காரணிகளைகயல்லாம் தாய் மண்ணில் விட்டு விட்டு நாம் இங்கு வந்து விட்டோம்.

"பின்னர் நிஜங்களைத் தொலைத்துவிட்டு
நிழல் தேடி...... நிழல்தேடி....."

விழிகளில் நீங்காத காட்சிகளாக இருந்தவை இன்று இதயத்தில் நீங்காதவைகளாகப் போய்விட்ட போதும் எமது வாழ்வு அவற்றுடன் கொண்டிருந்த பிணைப்புத்தான் அவற்றைப் பிரிந்த பின்னும் வாழ்வை அர்த்தப்படுத்துகின்றன.

தெருவிளக்குக் கம்பத்தின் கீழும்
நிலா முற்றத்திலும்
சுருதி மாறாத தாளலயத்துடன்
கரையைத் தழுவிச் செல்லும் சின்ன அலைகளில்
மெல்லிதாய் ஆடிக்கொண்டிருக்கும்
கட்டப்பட்ட தோணிகளிலும்
உலகமே சிறிதாகி
தெரிந்தும் தெரியாமலிருக்கும் தன்னை
சில வேளைகளில் எம்மை
விழிகளை நிலைகுத்த வைத்து அதிர்ச்சிக்குள்ளாக்கியும்
ஆத்திரப்படவைத்தும்
விகாரமும், அழகும், அற்புதமும் தெரிய
வெளிப்படுத்தும்
சிரிக்கவும், அழவும், மகிழவும் வைத்துப் பார்த்த
அவைகள்
இன்னும் எம்மைத் தமக்குள்
எதிரொலித்துக் கொண்டிருக்குமோ?....

இறந்தகால மகிழ்ச்சி வாழ்வில் இப்போழுது குருதிபடிந்து விட்டது. ஒற்றுமையின்மை நட்புகளைத் துண்டித்து விட்டது, பகைவரை விடவும் மோசமான எதிரியாய் எம்மவரையே கொல்லத்துடிக்கும் இன்றைய நாட்களில் இறந்த காலத்தின் இனிமை இல்லை. அருந்ததி சொல்வது போலவே,

"எமக்குள் எம்மை நாமே இழந்த......" ( இந்த வரியை இன்னமும் நீட்டி கவிஞர் சொல்ல வந்ததை மேலும் வலிமையாக்கியிருக்கலாம் என்பதே என் கருத்து.)

கவிதை முடியும் தருவாயில் இதயத்து வெறுமையை இப்படி வெளிக்காட்டுகிறார்.

"கதவுகளும் மூடிக் கொண்டன
விடைபெற்றுக் கொண்டவைகள்
காற்றும் வசந்தமும் எல்லாமும்..."

ஒடுக்கு முறைகளினாலும், எம்முடையான சீரளிவுகளினால் வசந்த காலங்கள் இறந்த காலங்களானதையும், நிகழ்காலங்கள் பயமுறுத்துவனவாகவும், எதிர்காலங்கள் சூனியமானவையாகவுமுள்ளன என்பதை அழகாக சொல்லும் கவிதை இது.

சாதாரண வரிகளைப் போலத் தோன்றினாலும் சில கவிதை வரிகள் வலிமையான அர்த்தமொன்றை சுலபமாகச் சொல்லி விடுகின்றன. "இரண்டாவது

பிறப்பு" என்ற கவிதையில் வரும் இரண்டு வரிகள் இவை;

"அழைப்பு விடுத்து தோற்றுப் போகிறது
வாழ்க்கை "

இவை நிட்சயமாக சாதாரண வரிகளல்ல. மனித எதிர்பார்ப்புக்களும் யதார்த்தமும் முரண்பட்டுப் போகும் நிலையும் அதற்கு அடிப்படையாக இருக்கும் காரணத்தையும் ஒரு கணம் சிந்திக்க வைக்கவில்லையா இவ்வரிகள்?

இதே கவிதையில் தொடர்ந்து வரும் வரிகளில்

வாழ்க்கையை
ஆற்றிலே தொலைத்து
குளத்திலே தேடும் சுந்தரர்களாய்
இரண்டாவது பிறப்பெடுக்கத்
தற்கொலை புரிந்தவர்களள்......

என்று சொல்லும் பொழுது ஒடுக்குமுறைகளிலிருந்து விடுபடுவதென்ற விடுதலையை நோக்கிய போராட்டம் தவறான பாதையில் சென்று கொண்டிருக்கும் யதார்த்தமும், மேலான சுதந்திரத்தை எதிரியிடமிருந்து போராடிப் பெறப் புறப்பட்ட நாம் எமக்கிருந்த சாதாரண சுதந்திரங்களுக்கே சாமாதி கட்டிவிட்டோம். இதில் வேடிக்கையானது என்னவென்றால் எமது இந்த அடிப்படை இழப்புக்கள் அனைத்தும் அந்த 'மேலான' விடுதலையின் பெரால் நியாயப்படுத்தப்படும் துரதிர்ஷ்டம்தான். இக்கவிதையில் அருந்ததி குறிப்பிடும் "இரண்டாவது பிறபபு" என்பது அந்த மேலான விடுதலை எனவும் "தற்கொலை" என்பது இருந்ததையும் இழந்துவிட்ட நிலை எனவுமே எனக்குப் படுகின்றது.

தாய்மண்ணின் அவல நிலையின் பிரதிவிளைவாய் அந்நியநாடுகளில் நாம் அகதிவாழ்வு வாழ்கிறோம். அற்ப வசதிகளில் மாத்திரம் வாழ்வைத் தேடுபவர்களுக்கு இவ்வாழ்முறை எந்தளவிற்கு உறுத்துகிறதோ தெரியாது. ஆனால் வாழ்க்கை என்பது வெறும் வசதிகளை அனுபவிப்பதும் உண்டு குடித்து உறங்கி, வேலை செய்து இயந்திரங்களாகி..... என்ற வட்டத்தைத் தாண்டி உள்ள அர்த்தமுள்ள வேறு ஏதோ ஒன்று என்ற உணர்வுள்ளவர்களுக்கு அந்நிய நாட்டு அகதிவாழ்க்கை இனிப்பதே இல்லை. மாறுபட்ட சூழலில் எமது சுயத்தை இழந்து இனவாதப் பார்வைகளில் சிக்கி அலட்சியப்படுத்தப்படும் கேலிப்பொருட்களாகவும், தொழிலகங்களில் இயந்திரங்களாகவும் நாட்களையும், வாழ்க்கையையும் கடத்துவதென்பது உண்மையில் ஆன்மாவை துன்புறுத்தும் விடயங்களாகும்.

கண்களை விற்று சித்திரம் வாங்கி
காட்சிப் பொருட்களாக
நாமே மாறி
உலகமெங்கிலும்
உரக்கவே சொல்கிறோம்

வந்து பாருங்கள்
வந்து பாருங்கள்
இந்த நூற்றாண்டில் வாழும்
மூத்த பெரும்
பழங்குடி நாங்கள்.

இத்தொகுப்பில் வரும் மூன்று கவிதைகள் ஒரு பொதுத்தன்மையைக் கொண்டிருக்கின்றன. அதுதான் விரக்தியுடன் கூடிய கேலியாக தனது உணர்வுகளை கவிதைவரிகளில் வெளிப்படுத்தியிருப்பதாகும். "வருக வருக தோழர்களே" கவிதையின் வரிகள் கடல் கடந்து வாழும் எம்மவருள் 'புத்திஜீவிகள்' என்ற முத்திரையை தமக்குத் தாமே குத்திக் கொள்பவர்களின் வார்த்தைகளுக்கும் நடைமுறைக்கும் உள்ள மிகப்ப்ப்பெரிய இடைவெளியின் நீளத்தையும் தத்துவ முகமூடியணிந்த சுயநலமுகங்களையும் அழைத்துக் கேலிசெய்கின்றன.

தம்மை வருத்தாத வரையில் பொழுது போக்கிற்காகத் தத்துவங்களைப் பேசியதும், புத்தகங்களுக்குள்ளேயே அனைத்துப் பிரச்சனைகளுக்கும் தீர்வைக்கண்டு சுலபமாக சொல்லிவிட்டு அதன் மூலம் தமக்கொரு அடையாளத்தை ஏற்படுத்திக் கொள்பவர்களின் முகங்களின் தரிசனம் இக்கவிதையில் கிடைக்கிறது. அழகிய புத்தகங்களை அடுக்கி வைத்து அழுகிப்போன தத்துவங்களை நியாயப்படுத்துபவர்களின் வார்த்தைகள் யதார்த்தத்திலிருந்து தள்ளியே எப்போதும் இருக்கும். 'தத்துவமற்ற நடைமுறை குருட்டுத்தனமானது' என்றொரு வாக்கியம் உண்டு. இருந்தாலும் அந்த நடைமுறைகளில் சில வேளைகளில் நம்பிக்கைகளும், தியாகங்களும், வீரமும் கூட மிஞ்சியிருக்க வாய்ப்புக்களுண்டு. ஆனால் நடைமுறையற்ற தத்துவமோ அழுகிப்போன பிணத்தைப் போன்றது

வீதி பார்த்த முகப்பில்
ஜன்னல்களைத்
திறந்து வைத்தபடி
மேசைமீது அழகழகாக
பல வர்ண அட்டைகளோடு கூடிய
புத்தகங்களை
பேப்பர்களை....

இன்னுமென்ன

வருக! வருக!

இந்தக்கவிதையைப் போலவே 'சுதந்திரம்' 'புதிய வரவிலக்கணம்' ஆகிய கவிதைகளிலும் கேலியுடன் கூடிய விரக்தியான விமர்சனத்தை வெளிக்காட்டுகின்றன.

வாருங்கள் எல்லோரும்
இழப்பினில் தானே
உரிமைகள்
கிடைக்கும்
இழப்போம் இழப்போம்

இன்பமாய் இழப்போம்.... விரக்திக்கும் சிரிப்புக்கும் இடையில் சில நியாயப்படுத்தல்களுக்கும் சம்மட்டியடியாக இல்லையா இந்த வரிகள்?

இவரது கவிதையில் அதிமாகக் காணக்கூடிய ஒரு பண்பு உள்மன தரிசனமாகும். இது 'புதிய வரைவிலக்கணம்' கவிதையில் நன்கு வெளிப்படுத்தப்படுகின்றது. இக்கவிதையில் தாய்மண்ணில் பறிக்கப்பட்டுவிட்ட கருத்து / எழுத்துச் சுதந்திரத்தையும் அதைப் பறிகொடுத்த ஒருவரது மனநிலையையும் கூவிநிற்கின்றது.

இந்தக்கவிதை பல்வேறு தனிமனித அவலங்களுக்கு மத்தியிலும் தனது கருத்தை வெளியிடும் சுதந்திரம் தன்னிடமிருந்தபோது தான் நம்பிக்கைகளுடன் மனிதனாக உயிர்த்திருந்ததையும் என்றைக்கு அது பறிக்கப்பட்டதோ அன்றிலிருந்து தான் ஒரு இறந்த பிணம் என்பதைச் சொல்கிறது.

இது தனியொருவரது மனவெளிப்பாடு என்றில்லாமல் மௌனமாக்கப்பட்ட ஆயிரமாயிரம் குரல்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. உண்பது உறங்குவது உழைப்பது மாத்திரம் தான் வாழ்க்கையெனில் மிருகங்களுக்கும் மனிதருக்கும் இடையில் வித்தியாசம் இருக்காது சிந்தனையில், மனிதநேசிப்பில் தான் மிருகநிலையிலிருந்து 'மனிதர்கள்'வேறுபடுகின்றனர். அருந்ததி சொல்வது போல் இவை மறுக்கப்படும் பொழுது, வார்த்தைகள் தொண்டை வரைவந்து துவக்குகளைக் கண்டு தொலைந்து போகும் போது நாம் இதயத்துடிப்பையும் குருதிச்சுற்றோட்டத்தையும் தவிர இறந்தவர்களே. பிணத்தையொத்த இந்த வாழ்வை வாழ மறுத்து புதிய உயிர்ப்பிற்காய் துடிப்பதும் சுதந்திரத்திற்கான தேடல்தானே. இத்தேடலிற்கான உணர்வின்றி நடைப்பிணமாய் வாழ்வதை விடவும் அதற்காக போராட்டத்தில் மரணித்தல் வாழ்வை விடவும் மகத்தானது.

'ஒரு மொழி ஆராய்ச்சி' அர்த்தமிழந்த வாழ்வில் பல சொற்களும் அர்த்தமிழந்திருப்பதைச் சொல்வதுடன் திசை மாறிய போராட்டம் உருவாக்கித் தந்துள்ளது. இத்தகைய சொற்களடங்கிய ஒரு அகராதியைத்தான்.

விடுதலை என்பது
பழைய அர்த்தத்தில்
சகல ஒடுக்குமுறைகளிலிருந்தும் விடுபடுவதென்பது
இன்றோ கருத்து இப்படியிருக்கு
அடங்கிப் போதல் ஒடுங்கி வாழ்தல்
இல்லையேல் முடிவு மரணம் என்பது....


என்று 'போராட்டம்' 'சுதந்திரம்' ஆகிய ஒவ்வொன்றினதும் அர்த்தம் மாறியுள்ள துரதிஷ்டத்தை இக்கவிதை வரிகளில் காணலாம்.

அருந்ததி சந்திக்கக் காத்திருக்கும் 'அந்த வேறொரு மனிதன்' எம்மெல்லோருக்குள்ளும் இருந்து இறந்து போன மனிதநேசத்தின் பிரதிநிதி. ஆழமான கருத்தில் எழுதப்பட்டுள்ளது இக்கவிதை.நம்பிக்கையுடன் ஒலிக்கின்றது.

சமகால சூழ்நிலைகளின் தாக்கம் கவிதைகளுக்குத் தூண்டுகோலாய் அமைந்ததனால் பொறுக்கமுடியாமல் 'பள்ளிவாசலில்' குருதிபடிந்ததை, காத்தான்குடிப் பள்ளிவாசலில் எங்கள் மானுடக் கனவுகள் அழிந்ததை வெட்கத்துடன் கூறும் போதிலும், வீரமில்லா அராஜகத்தையும் முதுகில் குத்துதிடும் சகோதரக் கொலைகளைக் கண்டு

என்னை நோக்கியும் கொலைக்கரங்கள்
ஆனால்
அதில் யாருமே என் எதிரிகளல்லாதவர்கள்

எனச்சொல்லும் வரிகளில் இன்றைய எமது அவல நிலையைச் சொல்லும்போதும் அந்நிய மண்ணில் கூனிக்குறுகிய எமக்கு முன்னால் ஈபிள் கோபுரம் மாத்திரமல்ல எல்லாமே உயரம்தான் என்று எமது உண்மை நிலையைத் தரிசிக்கையிலும் பொய்யற்ற கவிதை வரிகளினூடாக எமது காலத்தைக் காட்டுகிறார். எமது சமூகப்பின்னணியையும் ஒரு காரணியாகக் கொண்ட இவ்வவலங்களில் பெண்ணடிமை, சாதி என்பனவற்றையும் கூட நாம் அன்றாடம் காண்கையில் அருந்ததியின் கவிதைகளில் அவைபற்றிய தாக்கத்தைக் காணமுடியாமல் போனதற்குக் காரணமென்னவென்று தெரியவில்லை.




# பெண்கள் சந்திப்பு மலர் - 1991

பெண்கள் சந்திப்பின் முதலாவது ஆண்டு மலர் வெளிவந்துள்ளது. பெண் எழுத்தாளர்களின் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதை ஆகியவற்றை இது கொண்டுள்ளது.

தனிப்பிரதி விலை. 5 **DM**

5.60 **DM** மதிப்புள்ள தபால் முத்திரைகளை கீழ்க் கண்ட விலாசத்திற்கு அனுப்பி தாபால் மூலமும் பெற்றுக் கொள்ளலாம்.

சகல தொடர்புகளுக்கும்:

**PENNKAL CHANTHIPPU**

**FRAUEN TREFFEN**
**INFORMATION ZENTRUM DRITTE WELT**
**OVERWEGSTR. 31**
**4690 HERNE 1**
**GERMANY**